ஞாயிறு வெளியீடு. விலை 0—1—3. REGD. No. M. 4642.

திராவிடநாடு

மலர் 3. | 18—3—45 | இதழ் 51.

அன்பழகன் — வெற்றிச்செல்வி

திருமண வாழ்த்து

(பாரதிதாசன்.)

நன்றாண்ட மூவேந்தர் நாகரிக மேமாற்றி
வென்றாண்ட ஆரியத்தை வென்றாளத் தோன்றியவர்,
குன்றா மறவக் குரிசிலார் அன்பழகர்
என்றோழர் என்னல் எனக்குப் பெருமையதே

திருநின்ற என்றன் தமிழகத்துச் சீர்த்தி
உருவின் றறியாமே ஓம்புபடை கூட்டி
வருகின்றார் அன்பழகர் என்றொருநாள் கேட்டு!
விரிகின்ற செந்தமிழ்க்கு வெற்றி இனி என்றேனே

மண்டு புதுநினைவு வாயூறும் மாப்புலவர்
கண்டதமிழ் நாட்டில் கருத்திருண்டு கெட்டொழியும்
நொண்டிப் பசங்களின் நோக்கழிக்க அன்பழகர்
தண்டமிழ் பேசித் தமிழர்நலம் காத்தாரே

பாடுந் தமிழ்மகளைப் பார்ப்பனர்க்குக் கூட்டிவைத்த
பேடியினைக் "கம்பன்" "கலைஞன்" என்று பேசுமிந்நாள்
நாடு முழுதும் உரைபெருக்கும் அன்பழகர்
பீடுபிறர் பேசநான் பெற்றமகிழ் சொல்லரிதே!

பன்மொழியில் பல்கலையில் ஆய்வும் பழந்தமிழாம்
பொன்மொழியைத் தம்முயிராய்ப்போற்றும் பெருமாண்பும்
இன்மொழியில் நாட்டின் இருளகற்றும் நற்றிறனும்
என்மொழிவேன்! அன்பழகர் இந்நாட்டின்பொன்னணியே!

பற்றலரை வீழ்த்தும் பகுத்தறிவார் அன்பழகர்
பெற்றி யறிந்து, பிழிந்தபழச் சாற்றுமொழி
வெற்றி மகளார் விரும்புவதும் மேவுவதும்
முற்றுமியல் பென்று முழங்கும்என் முத்தமிழே!

வெல்லும் பகுத்தறிவும் காதல் விளைமணமும்,
நல்லவெனக் காட்டிவைத்த நம்பெரியார் நாட்டினிலே
கல்வி அழகோடு கட்டழகும் வாய்ந்தவெற்றிச்
செல்வியரின் விண்ணப்பம் அன்பழகின் தேனன்றே

வாழியவே வாழியவே வெற்றியினார்! அன்பழகர்!
வாழியவே இந்நாள்போல் என்றும் மணமக்கள்!
ஆழிநேர் அன்னாரின் அன்புநனி வாழியவே
சூழியவே நல்லறமே தோய்கநல் இன்பமே!

★ தேவ லீலைகள்! ★

[தேவாதி தேவா! தேவர் தலைவா! மூவரே! மூவரில் முதல்வனே! என்று, பக்திமான்கள், நித்த நித்தம் சத்தமிட்டுப் பஜிக்கக் கேட்கிறோம். சித்தம் சிதைந்தவனை, வித்தகனே என்று அழைப்பதுபோல, குடியனைக்குணவானே என்றுகொண்டாடுவதுபோல, குக்கலைகேசரி என்று அழைத்தல்போல, இருக்கிறது,காமவெறியர்களைத் தேவா என்றும் மூவா என்றும், அழைக்கும் போக்கு. ஏனெனில், எந்தப் பக்தியினுல்யாராரை, இங்ஙனம், ஆரியமதத்தைக் கடைப்பிடிக்கும் குறைமதியினர், பூஜிக்கின்றனரோ, அந்த மூர்த்திகளின்,லீலைகள்கேவலம்,காமாந்தகாரம், கபடம், கயமைக்குணம், காட்டுமிராண்டித்தனம், நிறம்பியதாக இருப்பதை, அதேபக்தி மான்கள் பாராயணம் செய்யும், புராண ஏடுகளிலிருந்து காணலாம். தேவலீலைகள் என்ற தலைப்பிலே, இந்தக்காமக்கூத் தர்களின் கோலாகலத்தை ஓரளவுதருகிறோம், கருத்துள்ளோர் சிந்திக்கட்டும், பழமை விரும்பிகள் வெட்கித்தலைகுனியட்டும், வாலிப உலகுகைகொட்டிநகைக்கட்டும்!!]

"இந்திரதேவா! இதுவே தக்கசமயம். தாமதிக்கவேண்டாம்.உடனேபுறப்படுக!'

"தூதா! என்னசேதி? எங்கே புறப்படச்சொல்கிறாய்"

"தங்களுடைய, நெடுநாளைய எண்ணத்தைப்பூர்த்திசெய்துகொள்ள அபூர்வமானசமயம், வாய்த்துவிட்டது, கிளம்புங்கள்."

"எங்கே?"

"பாரிஷதன், அரண்மனைக்கு!"

"ஆஹா! அந்தப்பேச்சை, ஏனடா தூதா எடுத்தாய்? அங்கு அந்த ரூபவதி வபுஷ்டமை என்னைவாட்டியபடி இருப்பாளே. நான்கெஞ்சியும் கொஞ்சமறுத்தாளே. என் மனம் பாகாய் உருகியும் அந்தப்பாவை, இந்தப்பாவிக்கு இணங்கவில்லையே. என்செய்வேன்? எவ்வாறு உய்வேன்? என்னென்னவெல்லாமோ செய்துபார்த்தேன். என்முழுத்திறமையையும் காட்டினேன், முடியவில்லையே. வபுஷ்டமை மீது கொண்ட மோகமோ, தணியவில்லை. அவளோ இணங்கவில்லையே ஏங்குதே என்மனம்"

"என்ன இது! இப்படிச்சோகிக்கலாமோ! அகலிகையின்..........."

"அது சுலபமாகமுடிந்துவிட்டது. சுலபமாகமுடிந்ததுமட்டுமல்லடா தூதா! அவளுக்கு, நான் இந்திரன் என்று தெரிந்ததும், ஆனந்தமும் பிறந்தது. பெரிய இடமாயிற்றே என்றபெருமையுமடைந்தாள். இந்த வபுஷ்டமை அப்படியில்லையே"

"அதற்காகத்தான்சொல்கிறேன். இச்சமயம் தவறினுல் மறுகணம் வாய்ப்பதரிது. புறப்படுங்கள் பாரிஷதன் மாளிகைக்கு."

"தக்க சமயமா? எப்படி?என்ன விஷயம்?"

"அங்கே, அசுவமேதம் நடக்கிறது."

"அசுவமேதம் நடந்தால் நமக்கென்னடா? அப்சரசுகளைப்பழிக்கும் அழகியான அவளல்லவா எனக்குவேண்டும்"

"அவசரப்பட்டு, என்பேச்சை முடிக்கமுடியாதபடி தடுக்கிறீரே. அசுவமேதயாகம் நடக்கிறது. அந்த அசுவம் இறந்துவிட்டது"

"இறந்துவிட்டதா? அதனுல்........"

"அதனுல்என்றுயோசிக்கிறீரே! வபுஷ்டமை மீது ஆசைகொண்டதால், உமது வழக்கமான புத்திகூர்மைகூட மழுங்கிவிட்டதோ? அசுவமேதயாகமுறைப்படி, குதிரையுடன் ஓரிரவு ராஜபத்னி, தங்க இருப்பது உமக்குத் தெரியாதா?"

"பேஷ்! பேஷ்! தூதா! நல்லசமயத்திலேகவனைப்படுத்தினுய்! வளமானமூளை உனக்கு."

இந்திரனுக்கும் அவனுடைய தூதனுக்கும் இம்முறையிலே உரையாடல் நடைபெற்றதாம் ஓர்நாள். பாரிஷதன் எனும் மன்னனுடைய மனைவி, மகா ரூபவதி. வபுஷ்டமைஎனும் பெயரினள். அவளிடம் மோகம் பிறந்தது, இந்திரனுக்கு. இந்திராணியின்எழில், மேனகை அரம்பை ஆகியோரின் லாவண்யம், ஆகியவற்றைவிட, வபுஷ்டமையின் வசீகரம் அதிகம்போலும்! எப்படியோ, இந்திரனுக்கு இவ்வெண்ணம், மூண்டுவிட்டது. ஏதேதோ செய்துபார்த்தான், அந்த வனிதை இடந்தரவில்லை. இந்நிலையிலே, மன்னன் ஓர்யாகம் செய்தான். அதன் முறைப்படி, மன்னன்மனைவி, யாகக்குதிரையுடன் ஓரிரவு தங்கிஇருக்கவேண்டும். அந்தச்சமயத்திலே, குதிரை இறந்துவிட்டது. இதுதெரிந்த தூதன் ஓடோடிச் சென்று, வபுஷ்டமையிடம் மோகங்கொண்டஇந்திரனுக்கு,இஷ்டபூர்த்திக்கு ஏற்றசமயம் இதுவே என்றுரைத்தான். இந்திரன் கிளம்பினுன், எண்ணம் கைகூடிற்று என்ற களிப்புடன். யாகசாலை சென்றான்! இறந்தகுதிரையின் உடலிலே தன் உயிரைப்புகுத்தினுன்!! வபுஷ்டமையிடம்கூடிக்களித்தான். இன்பஇரவுஅவனுக்கு. இது,சிவமகாபுராணம், சாமான்ய ஏடுகளிலேஉள்ளதல்ல, புண்ய கதையிலே உள்ள விஷயம்.

பிறனுடைய மனைவியைப் பெண்டாளும் பெருங்குணம் (!) இறந்த குதிரையின் உடலிலே புகுந்து, இரசானுபவம் நுகரும் இலட்சணம் (!) இந்திரனுக்கு இருந்தது. இத்தகைய காமாந்தகாரத்துக்குக் காட்டுமிராண்டித்தனத்துக்கு, உறைவிடமாக விளங்கிய இந்திரன், காமக்குரோதாதிகளை ஒழித்து, இச்சைகளை அடக்கிக் கடுந்தவம்புரிந்து கடவுள் அருள்பெற்று, தேவபதவி பெற்றவர்களுக்குள் சிலாக்கியமானவன், அவர்களுக்குத்தலைவன்! காமக்குரோதாதிகளை அடக்கியவன், செய்தகாரியம், பிறன்மனை விழைதல்மட்டுமல்ல, அதற்காக அநாகரீக, அக்ரமச்செயல்! கடவுள் நிலை எய்தியோனின் காமச்சேட்டை இதுபோலென்றால், அதற்கு அடுத்தபடியிலே வைத்துப் பேசப்படவேண்டியதபோதனர்கள்,ரிஷிகள் ஆகியோரின் யோக்யதை எப்படி இருக்கும் என்பதை யூகித்துக்கொள்ளலாம்!

இந்திரன் இவ்வண்ணம் அகலிகையிடமும் வபுஷ்டமையிடமும், அரம்பையரிடமும் ஆனந்தமாக இருந்து, காமஇச்சைக்காகச்செய்யத்தகாத செயல் பல புரிந்து, இருந்ததுபோலவே இந்திராணி அம்மையும், அவர்களுடைய சக்தியானுசாரம், ஏதோ 'சத்காரியம்' (!) செய்யாதிருக்கவில்லை. ஒருமுறைஇந்திராணிக்கு, மகாவிஷ்ணுவின் மீது மோகம் பிறந்ததாம். அவரிடம், அம்மை தமது ஆசையைத்தெரிவித்தார். "அடி! பேதாய்! கற்புக்கரசியாக வாழவேண்டுவது காரிகைகளின் கடனன்றோ. தேவமாதரும் பூவுலகமாதரும், சற்குணவதிகளாக இருக்க, நீ ஓர் வழிகாட்டியாக இருக்கவேண்டாமோ?சௌந்தரியம்மிகுந்தவனும். போகபோகாதிகளிலே, இலயித்திருப்பவனும், ரசிகனுமாகிய இந்திரனுக்கு நீபாரியையானாய். உனக்கேன் உதித்தது இக்கெடுமதி! பாபி! தேவலோகத்திலே இப்படி ஒரு தூர்த்தை இருத்தல் தகுமா? அதிலும் உனக்குத்தான் எவ்வளவு துணிவு! மும்மூர்த்திகளிலே ஒருவனாகிய என்னிடம், உலக ரட்சகனாகிய என்னிடம், ஸ்ரீதேவி பூதேவி மணாளனாகிய என்னிடமே உன் காமக்கண்களை எவினாயே! எவ்வளவு

(11-ம் பக்கம் பார்க்க)

அந்த வியாதி!

[13—3—45ல் காஞ்சிபுரத்தில் தோழர் இராமநாதன் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் கீழே தரப்பட்டிருக்கிறது.]

வேதத்தில் முளைத்து, வெளிநாட்டு மாக்ஸ் முல்லரினால் ஜெர்மனிக்குக் கொண்டுபோகப்பட்டு, இக்காலத்திலே, அங்கு ஹிட்லர் என்ற உருவிலும், இங்கு காந்தியார் எனும் உருவிலும், தாண்டவமாடி, மக்களின் மனதை மாய்த்துவிட்டது, இந்தநோய்!

உலகிலே பல இடங்களிலும் வியாபித்திருக்கும் இந்த வியாதி, மனிதனைக் கடவுளாகப்புகழ்ந்துதொழுது, பக்தி பூண்டு, பகுத்தறிவை அடகு வைப்பதாகும்!

இந்தநோயே காந்தீயம்! இது,பழைய கால, வேதகால ஏற்பாட்டின் விளைவு. பிராமணர் பூதேவராக்கப்பட்டு, மற்றவர்கள், யாவரும் பிராமணருக்குச் சேவை செய்யவே ஆண்டவனால் படைப்பிக்கப்பட்டனர் என்றகொடுமையானகருத்துத்தான், இந்நாட்டிலே, மதசமுதாய அரசியல் பொருளியல் அடிமைத்தனத்துக்குக் காரணம்.

பல காங்கிரசார், இந்தக் காந்தீயம் எனும் சிறையில் சிக்கிக்கொண்டு சீரழிகிறார்கள். அவர்களை மீட்டுவரவேண்டும். அவர்களைத் திராவிட இயக்கத்திலே சேர்க்கவேண்டும்.

சுயமரியாதை இயக்கம் ஒன்றினால்தான், காந்தீயமெனும் வியாதியைப் போக்கமுடியும். தென்னாடுதான், இந்தக் காரியத்தைத் தலைமை வகித்து நடத்திக்காட்டமுடியும். அதற்கானகட்டுத்திட்டங்கள் ஏற்படுத்திக்கொண்டு, வாலிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் பாடுபடவேண்டும்.

காந்தீயத்திலே சிக்கிச்சீரழியும் கூட்டத்திலே கைத்தறிக்காரர்கள் முக்கியமானவர்கள், அவர்களிடம் (கதர்) ராட்டை இயக்கம் நெசவுக்குஆதரவுதரும் என்று காந்தியார் பிரசாரம் செய்கிறார். இந்தப் பிரசாரத்தினால், ஏமாறுகிறார்கள். நான் 25 ஆண்டுகளாகக் கதர் இயக்கத்திலே நெருங்கிய தொடர்புகொண்டு, அனுபவத்திலே கண்ட உண்மையைக் கூறுகிறேன், கதர்நூல்,கவைக்குதவாது. ராட்டை இயக்கத்தினால் கைத்தறி இயக்கம் கேடுதான் அடையும். நூல் சேதாரம், நூலின்தரம் குறைவு, வேலைக்குக் கஷ்டம், இவ்வளவும், கதர்நூலினால் ஏற்படுகின்றது. இந்தியாவிலுள்ள அனைவரும், வேறு வேலைகள் எதுவுமே செய்யாமல், நூல் நூற்பதிலேயேகாலங்கழிப்பதானாலுங்கூடக், கைத்தறிகளுக்குத்தேவையான நூல் சப்ளை செய்யமுடியாது. கதருக்காகக் காங்கிரஸ் சர்க்கார் இருந்தபோதும், அதற்குப்பிறகும்கூடச், சர்க்காரிடம் மானியம் பெற்றுவளர்த்தும், கதர் ஓங்கவில்லை. கதர் இயக்கம் அழிந்தேதீரும்.

காங்கிரஸிடம், இனி, முஸ்லீம்களோ, ஆதித்திராவிடர்களோ, சேரமாட்டார்கள். நூறு காந்தியார்கள் கூடி அழைத்தாலும், ஜின்னாவைவிட்டுமுஸ்லீம்களும், டாக்டர் அம்பேத்காரைவிட்டு ஆதித்திராவிடர்களும் பிரியமாட்டார்கள்.

பேதமூட்டும் வேதமும் அதன் சாரமெனப்படும் கீதையும் ஒழிக்கப்படாமுன்னம், ஆதித்திராவிடரும் முஸ்லீமும் இந்துக்களை எப்படி நம்புவார்கள்?

"முஸ்லீம்கள், வெளிநாடுகள் பலவற்றிலே இருக்கிறார்களே, அங்கு எங்கும் பாகிஸ்தான் கேட்கவில்லையே, இங்குமட்டும் கேட்கிறார்களே, ஏன்?" என்றுகாங்கிரசார் நம்மைக்கேட்கிறார்கள். நான், அவர்களையே கேட்கிறேன். ஏன் இங்கு மட்டும், முஸ்லீம்கள் பாகிஸ்தான் கேட்கின்றனர்? நீங்களேதான் பதில் கூறுங்கள்.! பார்ப்போம்!! இங்கே, முஸ்லீம்களைத், தாழ்ந்த ஜாதி என்று கூறி, அவ்விதமே நடத்திக்காட்டிக் கொடுமைப்படுத்தியதனால்தான் பாகிஸ்தான் கேட்கிறார்கள்.

"ஒரு அழுக்குப் பிடித்த இந்துகூட என்கையால் தண்ணீர் சாப்பிடுவதைத் தோஷம் என்று கருதுவான்! இந்நிலையிலே, இந்துவும் முஸ்லீமும் ஒரே இந்திய இனம் என்று கூறினால் எப்படி நான் ஒப்புக்கொள்ள முடியும்" என்று ஜனாப் ஜின்னா ஒருதடவை என்னைச் சோகத்தோடு கேட்டார்.

பேதமும் ஜாதிப்பிளவுகளும் ஒழியவேண்டுமானால், மக்களுக்கு அறிவு, பகுத்தறிவு வேண்டும்.

பெரும்பாலான மக்களை ஒருசிறுகூட்டம் அடக்கி ஆண்டுச்சுரண்டிவாழ்வதற்கு ஒரு அமைப்புத்தான் ஜாதி !முறைதான் மதம்! இவைகளை ஒழிக்காமல், பொருளாதார பேதத்தை எப்படிப்போக்குவது?

காந்தீயம் எனும் வியாதி பரவியதால் வந்தவிபத்துகளைப் போக்கிட இதுவே தக்கசமயம். டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கும், இங்குவரலாமா, காங்கிரசிலேயேஇருந்து விடுவோமா என்று யோசனையாகத்தான் இருக்கிறது. தோழர் இராஜகோபாலாச்சாரியாருக்கும், அப்படித்தான் எண்ணம். ஆனால் அவர் காந்தியாரின் சம்பந்தியாகிவிட்டபடியால், காந்தீயத்தொடர்பை அவரால்அறுத்துக்கொள்ளமுடியவில்லை. அவர், நாம் கூறுவதிலே, பலவற்றை ஒப்புக்கொண்டார். திராவிட நாடு பிரச்னையையும் ஒப்புக்கொண்டார். ஆனால் தைரியமாகக் காங்கிரசைவிட்டு வெளியேற அவரால் முடியவில்லை. வடநாட்டு ஆதிக்கம்கூடாது, அது இருக்குமட்டும், ஒருநற்காரியமும் செய்யமுடியாது, ஆகவேதென்னாட்டைத்,திராவிட நாட்டைத் தனியாக்கி விடவேண்டும், என்றபிரச்னை, காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக்கூட்டத்திலேகூடக்கவனிக்கப்பட்டது

சுயமரியாதைக்கொள்கைகள் பரவியதும், நாட்டிலே மேற்கொண்டு அதனைப் பரப்ப, அமைப்புடன் வேலை செய்யவேண்டும் என்ற கருத்துடன், பெரியாரும் நானும், ரஷியா சுற்றுப்பயணம் செய்தோம். பெரும்பாலானகூட்டத்தை அடக்கிவைத்து ஒரு சிறுகூட்டம் சுரண்டிப்பிழைக்கக்கையாளும், முறைகளிலே முக்கியமானது மதம், என்ற விஷயமாக நாங்கள் ரஷியாவிலே பேசியபோது, அவர்கள் வியப்படைந்து, இது, மார்க்சும், லெனினும் கண்டுபிடித்துக்கூறிய உண்மைகளல்லவோ, உங்களுக்கு எப்படித்தெரியும் என்று ஆச்சரியத்துடன் கேட்டனர். காந்தி ஒருமகான், கோயில் கட்டிக்கும்பிடப்படவேண்டியவர் என்ற அளவு மக்கள் மூளையிலே படிந்திருக்கிறது வியாதி. அரசியலிலே அவர்காட்டும் வழிதான் சிறந்தது, என்று இலட்சக் கணக்கான மக்கள் எண்ணுகிறார்கள். இந்தவியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு அறிவூட்டி, நோய்போக்க வேண்டும்.

வீதியிலே செல்லும் ஒருவனைப்பத்து பேர், கும்பிட்டு, "நீங்கள்கடவுள்"என்று கூறினால், பலபேர்அதுபோலச்சொல்லக் கேட்டுக்கேட்டுஅந்தமனிதனுக்கேஒருசந்தேகம் வந்துவிடுகிறது "ஒருவேளை,நாம் உண்மையிலேயேகடவுள்தானோ"என்று. காந்தியார்நிலைமையும் அப்படித்தான்ஆகிவிட்டது. அவர் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவந்தபோது, தம்மை ஒரு சாதாரண மனிதர்என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தார். ஆனால் பலபேர்கூடிக் கொண்டு, அவரை மகாத்மா என்று புகழத்தொடங்கியதும்,அந்தப்புகழுரையைக் கேட்டுக்கேட்டு, காந்தியாருக்கே இப்போது ஓர் எண்ணம் பிறந்துவிட்டது. "நாம் மகாத்மாதான்" என்று அவர் நினைக்கிறார். இப்படிஒருதனிமனிதனைத் தெய்வப்பிறப்பாக்கிவிட்டு, நமக்கிருக்கும்

(9-ம் பக்கம் பார்க்க)

எச்சரிக்கை

புச்சிரெட்டிபாளையம்தோழர் B.ராமச்சந்திர ரெட்டியார், அறிக்கை விடுத்திருக்கிறாராம், சேலத்திற்குப்பிறகு கிளம்பிய ஓலத்துக்கு, ஆதரவுதேட. அதாவது, கட்சியைப்புதிய முறையிலே திருத்தி அமைக்க ஒரு திருமுகம் விட்டிருக்கிறார். அதிலே, தேர்தல்கள் பற்றிய திருப்பாசுரம்பாடிவிட்டுப்,பிறகோர்விஷயத்தைக் குறிப்பிட்டிருக்கிறாராம் அதாவது, மத சம்பந்தமான விஷயங்களை அரசியல்கட்சிகளில் புகுத்தக்கூடாது என்றுகூறுகிறார். அவருடைய அரிய முயற்சியினால் அமைக்கப்பட இருக்கும், கட்சி மதவிஷயமாகத் துளியும் தலையிடாதாம்!

பெரியார்மீது, அந்தக்கூட்டம் சுமத்தும் பெரியபழி இதுதானே! அதாவது, அவர், மதவிஷயங்களை அரசியல் கட்சியிலே கொண்டுவந்து புகுத்திவிட்டார் என்பது. இந்த "ஞானோதயம்" எப்போது ஏற்பட்டது? பெரியார், ஜஸ்டிஸ் கட்சியின் தலைமைப்பதவியைஏற்றுநடாத்தத்துவங்கியபோதா? இல்லை! ஓராண்டு, ஈராண்டு கழித்தா? இல்லை! ஆறு, ஏழு ஆண்டுகளுக்குப்பிறகு உதித்தது இந்த அபூர்வ ஞானம்! எந்தப் போதியமரத்தடியின்கீழ் அமர்ந்தனரோதெரியவில்லை, இந்த "ஞானம்" பெற! நேரங்கழித்து வந்ததாகக்கூட இருக்கட்டும்—இந்த "மதப்பற்றுள்ளவர்களுக்கு" ப்பல விஷயங்கள் இப்படித்தான் நேரங்கழித்தே தோன்றும்—அதிலே, எந்த அளவு நேர்மைஇருக்கிறது என்றுபார்த்தால்,நெஞ்சில்ஒன்று, வெளியில் பேசுவது வேறொன்றாக இவர்கள் கொண்டிருப்பது தெரிகிறது.

போகட்டும், மதம், மதம், என்றுஇவர்கள்குறிப்பிடுகிறார்கள்,அது,எம்மதத்தை? இந்துமதத்தை! இவர்கள் யார்? திருவாரூர் மாகாண மாநாட்டுத் தீர்மானப்படி (அதுபோது பெரியார் இவர்களுக்குத் தேனாகத்தான் இருந்தார்) இவர்களும் திராவிடர்களே! திராவிடர்களுக்குஇந்து மதவிஷயத்திலே, ஏன் இப்படி வக்காலத்து வாங்கிப்பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டது? பதில் கிடையாது!

இந்துமத தத்துவத்தின்படி நடக்கவேண்டுமானால், அரசியல் காரியத்திலே, இவர்கள் எந்தவேலையும், ஆரியதாசவேலை தவிரப்பிறிதொன்றும் செய்வதேகூடாதே! சூத்திரக்கூட்டம் சேவைக்காக பிராமண சேவைக்காகச் சிருஷ்டிக்கப்பட்டது என்பது சுருதிவாக்கியம். சுதர்மத்தை மீறுபவன்நரகம்புகவேண்டுமென்பது கீதாவாக்கியம். பூதேவர்களின்சுகானுபவத்துக்காகச் சூத்திரன் சகலகாரியங்களும் செய்தாகவேண்டியது சாஸ்திரக்கட்டளை.மீறுபவனைத்தண்டிக்கும்படி இந்திரனையும் வருணனையும், வாயுவையும் அக்னியையும்,உருத்திரனையும்மற்றவர்களையும் கூவி அழைத்திடும் பூசுரப்பாசுரங்களே வேதம். இந்த விதிப்படி நடந்தவர்கள் நற்கதி அடைந்ததையும், விரோதமாக நடந்தவர்கள் வதம் செய்யப்பட்டதையும், விளக்குவதே புராண இதிகாசங்கள். இந்தவேதம் சாஸ்திரம், புராணம் இதிகாசம், சுருதி, கீதை முதலியனவற்றால் பாதுகாக்கப்படுவதே இந்துமதம். இந்த இந்துமதத்தின்படி நடக்கவேண்டுமென்றால், அம்மதத்தைப்பற்றி, மாறான பேச்சுக்கூறாமல், திருத்தம் கோராமல், மறுத்துரைக்காமல், நடக்கவேண்டுமானால்,நண்பர்இராமச்சந்திரர்,அரசியலிலே பார்ப்பனருக்கு இவ்வளவு ஆதிக்கமா, பார்ப்பனரல்லாதாருக்கு உரிமைஇருக்கவேண்டாமா, என்று கேட்கும் உரிமையைஇழந்தவராகிறார். கேட்டதே, மதத்துரோகம், சாஸ்திரவிரோதம்! கேட்பவருக்கு இம்மையில்இம்சையும் மறுமையில் மாபாபமும் சம்பவிக்கும், என்று அம்மதம்கூறுகிறது. நம்மை, மதவிஷயமாகப் பேசவேண்டாம் என்றுகூறும் மகானுபாவர், மதத்தைநீக்கி அரசியலைநடத்திய போதிலும், பார்ப்பனர் — அல்லாதார், என்ற பேதப்பேச்சுக் கிளப்பினாலேபோதும், ரௌரவாதி நரகவாசம்சம்பவித்தே தீரும், சாஸ்திரப்படி! இதை அவர் அறிவாரா?

அரசு ஆள்வது எதற்கு? அரசனுடைய சுகபோகத்துக்கா? மக்களின்நலனுக்கு! மக்களின் நன்மைக்குஅரசுஇருக்கவேண்டுமானால், அந்த நலனைக்கெடுக்கும், காரியம், முறை, ஏற்பாடு, எதுவாகஇருப்பினும், நாம் ஆளவேண்டியவர்களே தவிர, இவைகளிலே கவனம் செலுத்துவது கூடாதுஎன்று கருதுபவன், அரசாளும் ஆற்றலைத்தான் பெறமுடியுமா, அந்த ஆட்சியிலே, அணுவளவு நன்மைதான் தோன்றமுடியுமா?

உழவனின் வேலை, விதைப்பது அறுவடை செய்வது மட்டுந்தானா? களை எடுத்தல் முக்கிய கடனல்லவா! மாகாண விவசாயிகளின் நலனைக் கவனிக்கும் ஏதோ ஒரு கழகத்திலேகூட இருக்கிறாராம், அண்ணல்,உழவன்எவனாவது,நான் விதைப்பேன், கதிர் முற்றியதும் அறுவடையும் செய்வேன், இடையே களை பறித்தல் என்வேலையல்ல என்றுகூறிடக் கேட்டதுண்டா? உண்ணும் சோற்றிலே தவறிவீழ்ந்த சிறுகற்களை, பருகும்நீரிலே படிந்திடும் தூசியை, நீக்காதார், உண்டோ? அதுபோல நல்லாட்சிக்குக்களையாய், நமது இனத்தின் முன்னேற்றத்துக்குத்தடைக்கல்லாய், நமது சுகவாழ்வுக்குக் கேடுபயப்பதாக உள்ள, ஒருமதத்தின். அட்டகாசத்தை அகற்றாமல், யார் ஆண்டுஎன்ன பயன்? குடியாட்சிஉணர்ச்சியும், பொதுவாகவே ஆட்சிவிஷயமாகப்புதுமைக்கருத்துக்களும்,தோன்றா முன்பு, பித்தனும் ஆண்டிருக்கிறான், காமச்சித்தங்கோண்டோனும் கோல்கொண்டிருக்கிறான், கோழையின் சிரத்திலேயும் மணிமுடி இருந்திருக்கிறது, ஆனால்அந்தஆட்சிகளை, அவலட்சணங்களாக்க் கருதுவதேயன்றி, அறிவுடையார் எவரும் மதியார். மதிப்பற்று, மக்கள் தொடர்பற்று, மதியற்று, குறைபோக்கும் கதியற்று,வேந்தனாக வாழ்ந்தாலென்ன, வேலும் சூலமும் பிடித்தாலென்ன, அலிக்கு ஆடையணி சூட்டியதுபோலன்றோ இருக்கும் அது. ஏன், ஆட்சி வேண்டும்? அரசியல்வேண்டும்என்று அனவரதம்துதித்துஎப்போது வரும் என்று ஏக்கத்தோடுஆரூடம்பார்த்துக்கிடக்கும் இவர்களுக்கு, இந்த எண்ணம் தோன்றவில்லை, எதற்கு ஆட்சி? ஆரியத்தின் ஏஜண்டாக ஆள இவர்கள் முயற்சித்தால்,அறிவுடையோர்,எங்ஙனம் அதனை ஆதரிக்கமுடியும். ஆரண்யத்தில் இருந்த ஆரிய இராமனின் பாதுகைகளாக இருக்கும் "பேறு" இவர்களுக்குச், சிலாக்கியமானதாகத் தோன்றக்கூடும். இப்படிப்பட்ட பாதுகைகளின் பரிபாலனத்தை, மானரோஷமுள்ள தமிழன், மதிக்க மறுக்கிறான், உடந்தையாக இருக்க இசையான்,உடலில் ஒருசொட்டு மானஉணர்ச்சி உள்ளவரை, இத்தகைய ஆரியக்கைப்பாவைகள் ஆட்சிப் பீடம் ஏறுவதைத்தடுத்தே தீருவான்.

இன்று, நமக்கோர் ஆட்சிதேவை,அது, நமது இனத்தை ஈடேற்றக்கூடியதாக, நமது நலனைப்பாதுகாக்கக் கூடியதாக இருக்கவேண்டும் என்பது திராவிடரின் தீர்மானமேதவிர எப்படியேனும் ஆட்சியைக்கைப்பற்றி, ஏதோ ஒருவிதத்திலே, ஆட்சிப்பீடத்திலே அமரவேண்டும்,என்ற பஞ்சையின் நினைப்பு அவர்களுக்குக் கொஞ்சமும் இல்லை. மன்னரின் விருந்து மண்டபத்திலே, இச்சகம் பேசிநின்று, அவர் தந்திடும் எச்சிலை உண்டுகளிக்க விரும்புவோர் சிலர் இருக்கலாம், ஆனால் அவர்களின் தொகை மிக மிகக்குறைவு! அவர்களும், மக்கள் மன்றத்திலே நிற்கும் நிலையற்றவர்! அத்தகையோரின், மொழியை வழியாகக்கொண்டு நடக்கத்துணியும், "தலைவர்கள்" எங்கே செல்வர்? வீழ்ச்சிக்குழிக்கு! அன்பர் இராமச்சந்திரரின் அறிக்கை, நமக்கும்,நாட்டுமக்களின் உளமறிந்த எவருக்கும், எதனைக் காட்டுகிறது? அவரைத் தவறான வழியிலே அரசியல்தக்கர்கூட்டம் அழைத்துச்செல்கிறது என்பதை! நாம், தடுத்தோம்,அது நமது கடமையாதலால்! கேட்டாரில்லை. விடுத்தோம் அவர் வழி செல்லட்டும், என்று. என் செய்வது? போதைக்காரருக்குப் போதனைபயன்படுவதில்லை, அது போதனையின் குற்றமல்ல, போதையின் தன்மை! அதிகாரபோதை, சாமான்யமானதல்ல. அது, உட்கொண்டவரை அடியோடு அழித்தொழிக்கும்வரை, தன் முழுத்திறமையைக் காட்டியபடியே இருக்கும்.

(9-ம் பக்கம் பார்க்க)

சவுண்டிகளுக்குச் சவுக்கடி

—: வீரன் :—

[பாதன் குறிப்பு:— "பாதா! விலகிநில்! இத்தவீணர்களுக்குஎன்னிடம் சவுக்கு இருக்கிறது. தடித்த தோலருக்குத் தக்கசவுக்கடி நான் தரவேண்டும்" என்றான் வீரன். "சரி" என்றேன். இதோ அவன்!]

பாழாய்ப்போன பதவி மோகம்இருக்கிறதே, அடி ஆத்தே, பணத்தாசையை விடப்பொல்லாது. மனிதன் பணப்பித்தையாவது சில சந்தர்ப்பங்களில் அசால்டாக விட்டுவிடக்கூடிய அவசியம் ஏற்படும். ஆனால்கவுரவஸ்தானங்களான பதவிகளின் மூலம் கிடைக்கக்கூடிய புகழில் (?) ஒருமனிதனுக்கு இச்சை விழுந்துவிடுமானால், அவன் செத்துச் சுடுகாடு போகிறவரையில் அது அவனை விட்டு விலகவே விலகாது போலிருக்கிறது. ஏதோ பேய்பிசாசினால்பீடிக்கப்பட்ட மனுஷாள் என்னென்னமோ விதமான அவஸ்தைகளை எப்படி எப்படியோ அனுபவிக்கிறார்கள் என்று சொல்கிறார்களே. அந்தமாதிரி இந்தக்கர்ம காண்டமான கவுரவபதவி சைத்தானால் பீடிக்கப்பட்ட மனுஷன் படாதபாடுபட்டுப்போகிறான், செய்யத்தகாத காரியங்களெல்லாம்செய்யத்தலைப்படுகிறான், செய்தே முடிக்கிறான்.

பதவிப்பித்துப்பிடித்தமனுஷனின்பிரலாபம் ஜன்னிவெறிகொண்டவன் உளறலைக்காட்டிலும் ஒருபடி மேலே போய்விடுகின்றது. பரம்பரையான குடும்பத்தின்கவுரவத்தைஅழிக்கவேண்டுமா?நீடித்த நண்பர்களின் சினேகத்தைஇழக்கவேண்டுமா? உதவாக்கரை 'பாய்காட்' பிரதர்களின் கூட்டுறவைநாடவேண்டுமா?இன்னும் என்னென்ன தகாத காரியங்களைச் செய்யவேண்டும், என்னென்ன தகும் காரியங்களைக்கைவிட வேண்டும்.? அத்தனையும் அந்தப்பதவி மோகினி பிடித்த மனுஷன் செய்யப் பின்வாங்குவதில்லை.

நகரதூதன்
22—12—35.

நகரதூதன் நமது தூதனாக இருந்த நாளிலே வெளிவந்த மதிமொழி இது. பதவிப்பித்தர்களின் சித்தம், விசித்திரம் என்பதுகூட அல்ல அவ்வளவுவேடிக்கை, அத்தகையபதவிப்பித்தர்களுக்குப் பாதந்தாங்கும் பேர்வழிகளின், போக்குஇருக்கிறதே அது, இதைவிட வேடிக்கையாக இருக்கும்.

"என்ன சார்! குட்டிச்சுவராகி விட்டதே. ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பு வந்தபோது, வீடு அழகாக இருந்ததே" என்று கேட்டால், வாழ்ந்துகெட்டவன், வீழ்ந்துபோன வீட்டைக்காட்டி விம்முவான்! என்வாழ்வு அப்படியாகிவிட்டது' என்று அவன் அழுகுரலிலே கூறுவான். மலர் விற்றுப் பிழைத்துவந்தவன் மலம் கூட்டும் வேலைக்குச் செல்ல நேரிடுவது, மச்சுவீட்டிலே வாழ்ந்தவன் பிச்சைக்காரனாவது, அவனவனின் வாழ்க்கையிலே ஏற்பட்ட வழுக்கலால்.

"அருணாசலத்தின் மனைவி அல்லவா நீ"

"ஆமாங்க. உங்களுக்கு எப்படித்தெரியும்?"

"அடேடே! நான் அந்தக்கலியாணத்துக்கேவந்திருக்கிறேனே. எவ்வளவு ஜோராக நடந்தது. ஆமாம்! நீ ஏன் இப்படி ஆகிவிட்டாய்"

"எல்லாம் காலவித்யாசம் தானுங்க. அவரும் நானும் சுகமாகத்தான் வாழ்ந்து வந்தோம். ஒருபாவி வந்தான் பசப்பிச் சிரித்துக்கொண்டு. இல்லாத ஆசை காட்டினான், ஏய்த்துவிட்டான் தவறிவிட்டேன், அவருக்கும் தெரிந்து விட்டது, இந்தக் கதிக்கு வந்தேன்."

மணமாகி மணாளனை விட்டுப்பிரிந்து, மாலையிலே மயக்கும் சேலைகட்டி, விழி காட்டி வழியே போவோரை"மணந்து" அங்கத்தை வளர்க்கும் தங்கத்துக்கும், வழுக்கிய வனிதையிடம் 'வரம்' கோரிச் சென்றவனுக்கும் இதுபோல் உரையாடல் நடக்கக்கூடும்!

ஆனால், நிலை கெட்டவர்கள்,நீண்டநாக்கினராகவுமாகிவிட்டால், அவர்கள்பரிதாபத்துக்குரியவர்களல்ல, கண்டனத்துக்குரியவராகின்றனர். அதுபோலக் கட்சியிலே வாழ்ந்து அதனால் பலன் இல்லையே என்று பிறிதோர் கட்சி புகுந்து, புது மேய்ச்சல் தேடும், மனிதமாடுகள் பல உண்டு. பழைய இடத்துக்காரரைக்கண்டால், மனிதமாடுகள்மட்டுமரியாதையை மறந்து முட்ட வந்தால், அவைகளின் வாலை நொறுக்கிடாமல் வேறு வேலை செய்வார் உண்டா? சுயமரியாதை இயக்கத்திலே, இருக்கிறவரையிலே சொர்ணம் கிடைக்காது என்று சோர்ந்து, சோரம் போனாலாவது சொகுசாக வாழலாம் என்று. சில சொரணை கெட்டவர்கள் நடப்பதுகண்டு எனக்குக் கவலை இல்லை. சோரம் போனபிறகு, வீரம் பேசுவதா? கம்பத்தில் கட்டுண்டபோது கள்ளன் கட்டளை பிறப்பிக்கத் தொடங்கினால், கொல்லைச்சாக்கால் அபிஷேகித்துக்கூட்டுக்கோலால் அர்ச்சித்து அனுப்புவார்களே, அதுபோலத்தானே, அத்தகைய போக்கினரின் ஆணவப்பேச்சு, ஆத்திரமூட்டிவிடும், அவர்களின் ஆணவத்தை அடக்கவேண்டும் என்று அனைவரும்எண்ணுவர். அதிலும், கஷ்டநஷ்டமேற்று, கலங்காது உழைக்கும் ஒரு கூட்டத்திலே இருக்க மறுத்து, அதிகார வர்க்கத்தை இஷ்ட தேவதைகளாக எண்ணிப் பூஜித்து, பரங்கியின் பாததூளி, பட்டாலே பரமானந்தம் என்றுகருதி, பட்டம் பதவிகளுக்காக, எதையும் விட்டுக்கொடுக்கும், மட்டரகங்களுக்குப் பறைகொட்டக்கூலி பேசிக்கொண்டுபோய்ச்சேரும், போக்கடாக்கள், குடிபோன இடத்திலே படிகாசுபெற, முன்பிருந்த இடத்தை, நாக்கில் நரம்பின்றிநிந்திப்பதுகேட்டால், அந்த மதிகேடர்களுக்கு, சூடு சொரணை பிறக்குமளவு, "டோஸ்" கொடுத்தாக வேண்டுமென்று, ஒருவருக்கில்லாவிட்டாலும் மற்றொருவருக்கு, இன்று இல்லாவிட்டாலும் நாளைக்கு ரோஷ உணர்ச்சி தோன்றாமலா போகும்?மயிலாடக்கண்டு வான்கோழி ஆடுவதே கேவலம், ஆடும் அந்தக்கோழி மயிலையும் பழித்தால்! கிளி மட்டுமென்ன நாமும்தான் கூவுவோம் என்று காகம் கரைவது காதுக்குவலி! கிளியைக் கேலியும் செய்தால்! பஞ்சத்தால் ஆண்டி வேடம் போட்டவன் பாரெல்லாம் மாயை என்று பேசுவதுகேட்டால், அந்தத்தடித்தாண்டவனை ஆண்டிக்கோலத்துக்கு முன்பிருந்து அறிந்தவருக்கு, வேடிக்கையாகத்தான் இருக்கும். அத்தோடு நில்லாமல் அவன், அரைபலம் கஞ்சாவை அனுதினம் உட்கொண்டால் அரனை உமையுடன் அர்த்தராத்திரியிலே காணலாம் என்று உபதேசம் செய்ய ஆரம்பித்தால், அவனைப் பூர்வாசிரமம் முதல் அறிந்தவர்கள் என்ன செய்வார்கள்? காதைத்திருகித் தலையில்குட்டி கன்னத்தில் அறைந்து காவியைக் கிழித்து, "ஏண்டா தாண்டவா! ஆண்டியானது, எதனால்? அடே உபதேசமும் வேறே செய்கிறாயே! சாப்பாடு பெறக்கற்றுக் கொண்ட சங்காசிவ சங்கார சத்தத்தை மெத்தப்புகழ்கிறாயே" என்றுகூறி, அவனைச் சுத்தம் செய்தனுப்பமாட்டார்களா? கட்சியைவிட்டு ஓடி, கால்பிடரியில்பட ஓடி, கண்டோர் கைகொட்டி நகைக்கும் விதமாக ஓடி, கனதனவான்காலடிதேடி, கங்காணி ஆட்டம் ஆடும் கயவர்கள், வேளைக்கேற்ற வேலை என்று, வெந்ததைத்தின்று நொந்த வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்வதோடு திருப்தியடையாமல், இருந்து விட்டுப்போன

(6-ம் பக்கம் பார்க்க)

சவுண்டிகளுக்குச்

5-ம் பக்கத் தொடர்ச்சி

இடத்துக்குக்குறை காணுவதுமடத்தனந் தானே! இந்தச்'சடங்கள்'எங்கே இருந்தால்தான் என்ன? இங்கே இருந்தபோது, சங்குஊதி விட்டுப்பங்கு கேட்டன! அங்கே இப்போது தம்பட்டமடிக்க அச்சாரம் பெற்றுவிட்டன! இந்த இலட்சணத்திலே ஏன் இவ்வளவு இறுமாப்பு?

பெரியாரின் போக்கு பிடிக்கவில்லையாம்! ஆமாம்! பிடிக்காதுதான்!! உரிமைக்குப்போரிடு, உனக்கென்ன இலாபம் என்று வாதிடாதே, இனத்துக்காகவேலை செய் பணத்துக்காக அல்ல! மானத்தை மதி, மந்திரி வேலைகளை அல்ல! தெளிவு பரப்பும் வேலைசெய், தேர்தல்தாகுவேலை வேண்டாம். என்றுகூறுகிறார் பெரியார். தேர்தல் நடக்காதா நமதுவாழ்வுபரிமளம் பெறாதாஎன்று ஏங்கிக்கிடக்கும்கூட்டம், எட்டிச்செல்லட்டும்! சேலத்திலேஇதைத் தான்செப்பினோம். சத்தம்இல்லைஇந்தஉன்மத்தர்களிடமிருந்து, எதிர்ப்புக்குவழி இல்லை! இம்மென்று பேசத்துணிவில்லை. கருத்ததுமுகம்! சிறுத்ததுமனம்! கைகால் ஒடுக்கம்! காணக்காட்சியாக இருந்தது அவர்களின் அன்றையஒடுக்கம்! இத்தகைய "இடுப்பொடிந்ததுகள்" இன்று, பெரியாரைத்தாக்கி, வருகின்றன, முகமூடித் தரித்துக்கொண்டு!.

புதுத்தலைவருக்குப் பல்லக்குத்தூக்கட்டும், பாரம்அதிகமானதும் கீழேபோடட்டும், எனக்குக்கவலை இல்லை, ஆனால், பல்லக்குத்தூக்கும் போககோடு போக்காக நம்மிடம் ஏன் வீண்மல்லுக்குவர வேண்டும். தங்கள் சொல்லுக்கு மதிப்பு எங்கும் இல்லை என்பதைத்தெரிந்து கொண்டும் பல்லைக்கடிப்பானேன், நரகலை வழித்தெடுத்துநாலுமூலைச்சந்திலேநின்று கொண்டு, நான்ஒருவீரன் என்று நர்த்தனம் செய்வானேன், நாட்டிலே தேடுவார் இல்லை 'இந்த நாதியற்றகூட்டத்தை, நாக்கைமட்டும் நீட்டுகின்றன, தாக்குச் சட்டிக்குத்தோழர்கள்!

நாட்டிலேநாலுஇடமாவதுநம்புவதற்கு ஆட்கள் உண்டு என்றதைரியம் இந்த நாகல் கடையினருக்கு இருக்குமானால் பெரியார்கண்எதிரிலேயே, பெரியதோர் கட்சி அமைக்கப்போகிறோம் என்று ஒரு பேச்சுக்கூறிவிட்டுக் கிடக்கட்டுமே! நடக்கிறதா என்று பார்ப்போம். அதைவிட்டு, ப்பெரியார் மேல் ஏன் பாணந்தொடுக்க வேண்டும்?

முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பொதுப் கட்டு, இனத்தால் சேரியாக வும் நிலையால் வேசரியாகவும் போய் விட்ட பரிதாபத்துக்குரியவர்களுக்காகப் பேசித்தமிழரைத் தட்டி எழுப்பத்தளராது உழைத்து, நாடு முனைகளிலேல் திலே துவக்கிய அந்த அரும் பணியைக் கோடி வெளுத்துக்காட்சிதரும் இன்றுவரை, அயராமல் ஆற்றிவரும் ஒரு அஞ்சா நெஞ்

சரைப்பஞ்சைகள், அரசியல் அனாதைகள், பட்டம்பதவியாளரின் பாதந்தாங்கிகள், ஈனத்தனத்துக்கு எழுதுகோலைவிற்கும் எத்தர்கள், கொள்கைப்பற்றறியாக்கோணங்கிச்சேட்டைக்காரர் கும்பலில்புகுந்து கொடி தாங்கக்கூலிகேட்கும்குறும்பர்கள், தாக்குகின்றனர், தகுதியற்றமுறையிலே, நேர்மையைமறந்து, நிலையைஉணரமறுத்து.

எங்கும் எதிர்ப்பு! எத்திக்கிலிருந்தும் ஏசல்! மேடை ஏறினால் ஜோடிக்காளைகள் கூட்டத்துள் தூரத்திவிடப்படும் துடுக்கர் கூட்டம்! கல்லடி! சொல்லடி! இவ்வளவுக்கும் இடையே நின்று, எதிர்ப்புகண்டு அஞ்சாது, என்உரிமை என்மனதிற்பட்டதைக்கூறுவது, என்று எக்காளமிட்ட, ஒரு இணையில்லாத்தலைவரை, பிணையல்வாழ்வால்மட்டுமேபொது வாழ்விலே இருந்துதீரவேண்டிய தூதர்கள், தூபதீப நைவேத்திய நேரத்திலே துதிசெய்துநின்றால் சுண்டல் கடலை கிடைக்குமென்று சுருதியை உயர்த்திப் பாடும் சும்மாடுகள், பொதுமக்கள்முன்பு சென்று, நடமாடும் நல்லநிலையை எய்த முடியாத கபந்தங்கள், கண்டிக்கின்றன!

ரிஷியானாலும் என்ன, தவசியானாலும்என்ன, வழிகாட்டியானாலென்ன, வைகுண்டவாசியானாலென்ன, வண்டவாளங்களை வெளியிட்டேதீருவேன், வந்ததுவரட்டும், வறண்டமூளையினர் வந்தனம்செலுத்த மாட்டார்களேஎன்றெண்ணிஅஞ்சி, வஞ்சகரின் அடிபக மறப்பதே வீரனின் நீங்காக்கடமை என்று சொல்லி, மார்தட்டிநின்று, தியாகத் தீயிலே குதித்துத்தமிழருக்குப்புதுவாழ்வு தந்த தந்தையை, தத்திநடக்கும்போதே தறுதலையாகி தான்தோன்றியாகி, தடிதூக்கும் தாண்டவராயனாகிப் பிடிஆள் வேலைசெய்து பிழைக்கவேண்டிய நிலை பெற்றபேதைகள், தாக்கிஎழுதுகின்றன. அந்த அறிவிலிகளின் துணிவுக்கும், பல்லாயிரக்கணக்கிலே, தமிழகத்திலேஇன்று பெரியாரிடம் பேரன்புகொண்டு, அவர் கண்டவழிநடந்து, இடையே எந்தஇடர் வரினும் கவலையோ கிலியோ கொள்ளாது பணிபுரியும் அன்பர்களின் பொறுமைக்கும், போர்மூண்டுவிட்டது. பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு! துணிச்சல், கடைசிவரை காப்பளிக்கும் ஆயுதமாகாது.

நாடுமுழுதும், நான்கு ஜாதிகள் நான்முகன் கட்டளைஎன்று நம்பி அதிலே திராவிடமக்கள் நாம்நாலாம்ஜாதி, பார்ப்பனனுக்குச்சேவை செய்யத்தோன்றியவர் என்று எண்ணி, ஏமாந்திருந்தநேரத்திலே, ஜாதிஎன்பது ஏதடா! பேதம், ஆரியனின் சூதடா! நில்லடா! உன்அந்த வாழ்வைஎண்ணிப்பாரடா! என்றுமுழக்கமிட்டு, முரசுகொட்டித்திராவிட முரசு ஒலித்திடச்செய்த ஒப்பற்ற தலைவரை, ஓட்டைஒடிசல்கள், முட்டைதூக்கிகள், வெத்துவேட்டுகள், கண்டிக்கின்றன.

எட்டுமுறை சிறைசென்ற தீரனைத் தியாகம்இருக்கும் திக்கு நோக்கியுமறியாத தீயர்கள் திட்டுகின்றனர்! தமிழ்! தமிழ்! என்று நாக்குதழும்பேறப்பலர் கூறி, அத்தமிழை ஆச்சாரியார் ஆட்சி இந்திபகுத்தி இழிவுபடுத்தியபோது, என் செய்வது என்று ஏங்கி, வாயில்விரல் வைத்துக்கொண்டு, வித்தகரும் புத்தகம் படித்தவரும் வீதிமுனை நின்றுகொண்டிருந்தகாலை, ஊரெங்கும் ஓடி, உழைப்பாளிகளைத்தேடி, உத்தமத்தோழர்களை நாடி, தமிழனின் தீரத்தைப்பாடி, ஆச்சாரியார் ஆட்சியைச்சாடி, சிறைச்சாலைக்குச்சென்று, அறுபதாம்ஆண்டிலேவெஞ்சிறைபுகுந்து அக்னிவீசும், நாட்களிலே, வெப்பமிகுந்தபெல்லாரிச் சிறையிலே வாடிய, வீரத்தலைவனை, வெற்றிவீரனை, வாலிபர்தோழனை, வற்றாதபகுத்தறிவின் காவலனைத்திண்ணைதூங்கிகள், தெருவில்புரண்டு தேம்பிடும் தேஹிகள், அரசியலிலே பலமுறை தேசாந்திரம்போய் வந்ததெகுடுதத்தக்காரர்கள், தூற்றுவதா?

இனத்தை அறியாது அதன்இயல்பும் தெரியாது, மதமஎதுவென்றுஉணராது, ஆரியர் மதத்தைக்கொண்டு மக்களை அடிமைகொண்டவிதம்தெரியாமல், நமது மக்கள், நினைப்புகெட்டு, நிம்மதியற்றுக் கிடந்தநேரத்தில், வெள்ளத்தை எதிர்நீச்சால்கடந்து, வீரப்பணிபுரிந்து, நம்மை நாம் உணரவும், நமதுஇனம்இதுவெனத் தெரியவும், அதன்விடுதலைக்குப்பாடுபடவும், அந்தப்போரிலே பிணமானாலும்சரி, கவலையில்லைஎன்ற உறுதியை நாமபெறவும் உழைத்த உத்தமனை, உளறுவாயர், குளறுமொழியினர், அரசிய கூத்திகள், நயவஞ்சக நாத்திகள், நிந்திப்பதா? தமிழரின் செவிமந்தமென்று, சிந்தையிலே செருக்குபடிந்தசில்லுண்டிக்குணத்தவர், எண்ணிவிட்டனரா? யார்மீது பாய்கிறோம்என்பதறியாத ஏமாளிகளின், கொட்டத்தைத்தமிழகம் நெடுநாட்களுக்குவிட்டுவைக்கும் என்று கட்டைமதியனர் கருதுகின்றனர்போலும். கரிமீது கரையான்போர் தொடுக்கிறது! புலிமீது புழு பூசலுக்குக்கிளம்புகிறது! பெரியார் மீது மோதுகிறது ஒருஅறியாக்கூட்டம், மலைமீது மோதிக்கொள்ளும் மடைமையைத்தமது கடமையாகக்கருதுகிறதுஒரு கபோதிக்கூட்டம். கானகலாதரன்என்று கருதிக்கொண்டு குரல்கிளப்பும் கர்த்தபத்தைக்காரிஉமிழுவதும் காலக்கேடு என்றுதானே கருத்துள்ளோர் கருதுவர். பெரியாரின் மௌனம், இந்தப்பெருங் குணத்தைக்காட்டுகிறது.

மதகுருமார்களும்மடத்துஅதிபரும்கோயில்குருக்களும், வக்கீல்ஐயரும்ஆனுய்யர்க்கமும் ஐஸ்வரியம்பெற்றோரும், அவரை எதிர்த்தனர். ஆற்றல் அரண் அமைத்துக்கொண்டுஊறிவெனும் வாளேந்தி, உழைப்பெனும்புரவிஏறித்தமிழகத்திலேஉலவி, ஆரியக்காட்டை, அச்சமதயை தாட்சணியமின்றி அழித்தொழிக்கும், பெரியார், தமக்கு

எதிரிடையாக அமைக்கப்பட்ட எதிர்ப்பு முன்னணியைக்கண்டு, எஃகு உள்ளம் கொண்ட நமக்கு இந்தஎதிர்ப்பு எம்மாத்திரம் என்றுகூறி, களத்திலே போரிட்டபடி மாண்டாலும் மாள்வேனேயன்றி கனபாடிகளின் காட்டுக்கூச்சலைக்கேட்டு வீட்டுக்கோடிஒளியும், கோழையாகமாட்டேன், நானோர் திராவிடன், என்றுவீர மொழிபுகன்று இனம்வாழவழி அமைத்துத்தந்தார். அவர்காணாத களமில்லை! வெற்றிபெறாதபோரில்லை! வீணரின் உரைஅவரைவிரட்டியதில்லை! வேட்டுக்கே அவர்விரண்டதில்லைவேசரிகளின்வெத்து வேட்டுகளுக்கா அவர்அஞ்சப்போகிறார்?

மதியும் நிதியும்படைத்து ஆரியகுலத்தின் தலைவரென்ற நிலையும்பெற்று, சீமான் சீனுவாச ஐயங்கார், சீறிப் போரிட்டு, க்கண்டதுஎன்ன? ஆள்வது நானா, இந்த இராமசாமி நாயக்கரா? என்று சட்டசபையிலே கர்ஜித்த ஆச்சாரியார், காண்பதெல்லாம் கருப்புக்கொடியாகவே இருக்கிறதே காந்தியேஎன்று வார்தாவுக்கு விண்ணப்பித்துக் கொள்ள நேரிட்டது. அம்மியும் குழவியும் ஆகாயத்திலேபறந்ததே, இந்தஉமியும்தவிடும், உலையின்முன் என்னசெய்யும்! சீறினசிறுத்தை செத்துக்கிடக்க, செந்நாய்க்கூட்டமா சிங்கத்தை வீழ்த்தும்! மந்தமதியினரே! மரமண்டையினரே! சொந்தபுத்தியைச்சோற்றுக்காக இழந்துவிட்ட சோணகிரிகளே! சொல்புத்தி கேட்க மறுக்கும் சோடைகளே! மதியிலாதமமதையாளர்களே! மீளமார்க்கமின்றிமாள்வீர்கள், அரசியல்துறையிலே! மந்திக்குணம், சிந்துக்குரியதல்ல!

ஆரியத்தின் மண்டையைச் சிதறடித்த சுயமரியாதைச்சம்மட்டி, உமது சிரத்தின் மீது உராய்ந்தாலே போதும், வழித்தெடுக்கமுடியாதபடி கூழாகிவிடும், உமது குறும்புக்கோமாளிக்கூத்தும், நாடு முழுதும் கூடித்தொழுத நேரத்திலேயே காந்தியமெனும், புரட்டைத்தூளாக்கிய காவலன்முன், வீட்டிலேயேகூட, "ஏனோ! இந்தவீண்வேலை!" என்று கேட்பவரால் சூழப்பட்டிருக்கும்பேர்வழிகளாகியநீவீர் என்னசெய்யமுடியும்? எந்தக் காதிலே, உங்கள் அபசுரம் விழமுடியும்? மேடை உண்டா? மேனமினுக்கிகளின் ஆடையைப் பிடித்தலையும் பேடைகளே, நரிவாலைக்கொண்டுஅரிமாவை அடக்கமுடியுமா? என்று தமிழகம்கேட்கிறது.

"ஓ, எனக்குத்தெரியும் இந்த "உசுருக்குத்துணிந்ததொண்டர்களை" என்று உறுமினால் உபயோகமில்லை. உசர்போனாலும் சரி ... சர்போனாலும் சரியே, என்றுகருது மனவு உரிமைப்போர்உணர்ச்சிகொண்டவர்கள் உங்கள் முகத்தைக்காண்பதே கூடாதுங்கள் யோக்யதையைக் கெடுத்துவிடும்என்று எண்ணியே இதுநாள் வரை இருக்கின்றனர் இதனை அறியாது, இஞ்சிதின்று விட்ட மந்திபாகி ஆப்பை அசைத்தால், அவதிப்படத்தானே வேண்டிவரும்.

புத்திகூர்மை இல்லாவிட்டால் கூடப் போகிறது, கொஞ்சம் ஈவு இரக்கம், சிறிதளவு இன அபிமானம், கொஞ்சம் மனிதாபிமானம் இருக்கிறதா? யாரை ஏசுகிறோம், என்றுஒருவிநாடியாவதுசிந்தித்ததுண்டா? நீங்கள் ஏறிச்சென்று, இன்பபுரிக்குச் செல்லவேண்டிய மரக்கலத்தை ஓட்டை செய்ய எண்ணுகிறீர்களே, பொதுவாழ்விலே ஒண்டஇடமின்றிஓட்டாண்டிக்கோலத்திலே இருக்கும் மோசாண்டிகளே! கலம் பழுதானால்,கடலிலேவீழ்ந்து சுறாவுக்கு இரையாகிவிடநேரிடுமேஎன்ற யூகமாவது இருக்கிறதா!

விவேகமூட்டிய சாக்ரடீசுக்கு விஷமூட்டிய வீணரை, கடவுள்நெறிகாட்டிய வழிகாட்டிக்குக் கல்லடி தந்தகயவரை, நல்லுரைபகன்றவரைக் கல்லறை புகச்செய்த காதகரை, இன்றும், (இனிஎன்றென்றுங்கூட,) மதியுள்ள மக்கள், மனம் நொந்து கடிந்துரைக்கின்றனரே! ஒரு இனத்துக்காக, தற்குறிகள் அதிகமாகித் தாசத்தன்மை தலைவிரித்தாடி, சிந்தனை சிதைந்து, ஆரியருக்கு வந்தனைவழிபாடுகள் மிகுந்துத், திராவிடத்திலே திகைப்பும் தத்தளிப்பும், இருந்த நேரத்திலே, யார், அந்த இனத்துக்காகப்பரிந்து பேசியது? அன்னமிட்ட மூதாட்டியைக், கன்னக்கோலன், தூங்கும் நேரத்திலேகழுத்தறுப்போம் என்ற ஈனத்தனமானஎண்ணங்கொண்டு கத்தியைத் தீட்டுவானும்! இதோ, இன இழிவுபோக்கப் போரிட்டு வரும் தலைவரை, அவரால் ஆதரவுபெற்ற பிறகு, அவரையே ஆபாசமாகக் கண்டிக்குமளவு, மனதிலே ஈரம் வறண்டுவிட்டதே! சதிசெய்து நிதி பெறும் சழக்கரை சாமர்த்தியசாலி என்று யாரும் கூறாரே! மூன்றடுக்கு மாடியிலே, வசித்துக்கொண்டு, உல்லாசத்துடன் உறவாடிக்கொண்டு இருக்க. "நிலை" பெற்றும், அதனை அனுபவிக்க மறுத்து, அறியாமையை அழிக்க, இரவு பகல் பாராமல், நோய்நொடியைக்கவனிக்காமல், வெட்டுகுத்துவருமோ என்று அஞ்சாமல், காடு மேடு, பட்டிதொட்டி சுற்றிப்பாணிபாடும் பெரியாரைப்பதட்டமாகக் கண்டிக்கும் பதர்களைக்கேட்கிறேன், அவர் ஆற்றிய அருந்தொண்டுக்கு, இந்நாடாகவன்றி வேறோர் நாடாகமட்டுமிருந்தால், எத்தனை இடங்களிலே சிலைகள் அமைக்கப்பட்டிருக்கும்! எத்தனைபுகழ்கிடைத்திருக்கும்! நன்றிகெட்ட கூட்டத்திலே நரைத்ததலையுடன், தடிஊன்றித் தள்ளாடி நடந்து வரும் தலைவனைத் தகாதமொழி கூறுகிறீர், தாங்காது, தாங்காது தமிழகம், இத்தகையத் துரோகத்தூற்றலை.

தலைவர்கள் உண்டு! வண்டி வண்டியாகக்கொண்டு வரலாம்! புதிய புதிய மோட்டாருடன் வரக்கூடும்! அழகழகான அரண்மனைகளிலே வாசஞ்செய்பவர்களைக் கொண்டுவரலாம்! ஆனால் ஒரே ஒருபெரியாரைத்தானே, பெறமுடியும்!

"ரயில்வே ரிடயரிங்ரூமிலே, இரண்டு, வாடகைக்குஎடுக்கவும் எலக்டிரிக் விசிறி அங்கே சரியாக வேலைசெய்கிறதாஎன்று பார்க்கவும். F. L. 2. உண்டா என்று தெரிந்து எழுதவும். முனிசிபல் வரவேற்புக்கு ஏற்பாடு முடிந்ததா? டீபார்ட்டிக்கு எங்கே ஏற்பாடாகிவிட்டது?" என்று கடிதமனுப்பும் கனதனவான்களைக்காணலாம்! காண்பதனால் பணப்பயனும்பெறலாம். பிணம் பிடுங்கிப்போக்கினருக்கு அதுபிரியமாகவும் இருக்கலாம்.

"சரியப்பா! ஜட்காகிடைக்காவிட்டால் ஒருமாட்டுவண்டிதான்பாரேன். அதுகூடத்தேவையில்லை. மளமளவென்று நடந்தே போய்விட்டால். பத்தணு மிச்சம்" என்று கூறிவிட்டுப் பாதசாரியாகி, வீதிபல நடந்து,விறு விறுவென்று ரயிலடி செல்ல யார் இருக்கிறார்கள், பெரியார் தவிர.

"கூட்டத்திற்குப் போலீஸ் பந்தோபஸ்து தக்கபடி ஏற்பாடாகவேண்டும். D. S. P. எனக்கு வேண்டியவர்தான். அவரிடம் ஒரு வார்த்தைசொல்லுங்கள்" என்று கோழைமொழி பேசும் சோடீஸ் வானைக்கூட்டி வரலாம். அவரைக்கட்சிக்குக்கூட்டிவைப்பதால் கூலியும் பெறலாம், ஆனால், "அடே என்னப்பா, நீங்கள் இப்படித்தொல்லை கொடுக்கிறீர்கள். கல்லைப்போடுபவன், போட்டுக்கொண்டிருக்கட்டுமே. உங்களுக்குப் பயமாக இருந்தால் போய்விடுங்கள் தொலைவாக. அவன் கல்வீசி, என்ன காணப்போகிறான். கொஞ்ச நேரமானதும், கைவலி எடுக்கும், குந்தனயா குரங்கே சந்தடி அடங்க என்று இருந்துவிடுவான்" என்று கல்மாரியின் நடுவே கலங்காமொழிபேசிடும், ஒருதலைவரைக் (பெரியார் தவிரக்) காட்டுங்கள் பார்க்கலாம்!

பரிபாலனம் செய்த, பார்க்கியின் நேசமும் பெற்ற, பட்டம்பதவிகளைப் பெறுவதற்கு உரைவிடமென்று பலரும் கருதுவதற்கு இலக்காக இருந்த இந்த ஜஸ்டிஸ் கட்சிக்குத்தலைவரான பிறகு, அவர், உங்களைத்தோட்டக்கச்சேரி நடத்தச்சொன்னாரா, டின்னர்கள் கேட்டாரா, முனிசிபல் வரவேற்புகள் வேண்டுமென்றாரா, தொல்லையைத்தானே தேடித் தேடிப் பெற்றார், கல்லைவீசிய கரங்களையன்றோ கண்டார், உழைத்தார், உழைக்கிறார், தேய்ந்துபோயிருக்கிறார், நெஞ்சழுத்தம் ஒன்றினால்மட்டுமே அவருக்குள்ள நோய்கூட, அவ்வப்போது ஓய்வு எடுத்துக்கொள்கிறது. சிங்காரச்சோலையிலே உலாவிடும் சீமான்களைத் தேடுகிறீர், கடைவீதிஉலவி நமக்காகக் காரியமாற்றும்கர்மயோகியைக்கண்டிக்கிறீர், சேர்மன் இராமசாமி வெறும் ஆசாமியானார், உங்கள் பொருட்டு உழைக்க, சாதாரண ஆசாமிசர். ஆனதற்காக, சாமரம் வீசச்செல்கிறீர். பெரியார் இராமசாமியின் பெருங்

(8-ம் பக்கம் பார்க்க)

சவுண்டிகளுக்குச்

7-ம் பக்கத் தொடர்ச்சி

தொண்டுக்கு இணையாகப் பணியாற்றும் தலைவரை, இனி ஓர் நூற்றாண்டு காலத்திற்குள் பெறமுடியாது. எதிர்காலம் அதனை நமக்கு இடித்து இடித்துக்காட்டப்போகிறது.

"இரவு எட்டுமணிக்குள் கூட்டத்தை முடித்துவிடவேண்டும், அதற்குமேல்நான் ஓர்நாட்டியம் காணச்செல்ல வேண்டும்" என்றுகூறும் தலைவர்களைப்பெற, காலையிலே ஓரிடம் மாலையிலே மற்றோரிடம், இரவிலே இரயில்பிரயாணம், எனும் முறையிலே கட்சிப்பணியாற்றும், தலைவரை இகழ்கிறீர். தமிழனின் பண்புஎப்படி உங்கள் உள்ளத்தைவிட்டுப் போய்விட்டது? எங்கிருந்து வந்து புகுந்தது இந்தஇழி குணம்? எதைநம்பிக்கொண்டு செல்கிறீர்இருண்டபாதையிலே?யாரிட்டபோதனை? பெறுவீர்பொறுக்கமுடியாத வேதனை, என்று வாலிபஉலகு கூறுகிறது வழி தவறிச்செல்லும், பழிகாரருக்கு.

பெரியார் இராமசாமிசென்றகிழமை, பல்லூர்சென்றார் நாக்கிலேபுண், அதிலே வடியும் சீழ், உள்ளே போனால் பாதகமாகுமே என்று பயந்தாராம்டாக்டர் சுந்தரவதனன், வேறோர் டாக்டரின்சிகிச்சை நடந்துகொண்டிருக்கும் நேரம். அந்தச் சமயத்திலே, மூன்றுமணிநேர முழக்கம். யாருக்காக? நாக்கிலே இருக்கும்புண்ணைப்பற்றியும்கவலையின்றி, இனப்புண் ஆற்ற மருந்திட்டார். அவரை, நகரதூதன் எழுதுகிறார், குறுக்குச்சால் ஓட்டுகிறார், இரும்படிக்கும் இடத்திலே ஈக்கு என்னவேலை, பாவட்டா போடுகிறார், என்று. இந்தத்துணிவு இருக்கிறதே, துரோகமிருக்கிறதே அதைப்படிக்கும்போது எனக்கு நெஞ்சு வெடித்துவிடும்போலிருக்கிறதே, என் செய்வது!

உதைத்தகாலுக்கு முத்தமிடுவதுபிரிட்டிஷாருக்கு உண்டாம், அந்தச்சாயல் பெரியாரிடம் பரிபூரணமாக இருக்கிறதாம், கேட்டீர்களா, இந்த மொழியை, விழியில் வழியும் நீரைத்துடையுங்கள். நகரதூதனில் நிந்தனைமேலும் இருக்கிறது. பந்தியில்இடம்இல்லைஎன்றுகையைப் பிடித்துவெளியே இழுத்துவிட்டால்இலைபொத்தல், இலைபொத்தல்என்றுகூறும்கவுரவவிருந்தாளிக்கு உவமை காட்டுகிறார், பெரியாரை. இந்த மமதையை என்னென்று எண்ணுகிறீர்கள், அவருக்குப் பந்தியிலே இடமில்லையாம்! இதுவரை நாம் கேட்டறியாத தீரமொழிகளை எடுத்துரைத்த மாவீரர் தலைவனுக்கு, பந்தியிலே இடமில்லையாம், குருகுலப்போராட்டகாலமுதற்கொண்டு, திரு இடம் பெறுவதற்கான போராட்டத்தைத் துவக்கி வைக்கும்காலமவரையிலேவாளை உரையிடாது போரிடும்ஒருதலைவருக்குப் பந்தியிலே இடமில்லையாம், மண்டையிலேமூளை இருப்பவன் எவனாவதுஇதனை ஏற்றுக்கொள்வானா? சிந்தையிலே, சிறிதளவு செய்நன்றிமறவாத்தன்மை இருப்பவன் எவனேனும் இதைச் செப்பிடமுன் வருவானா?

பெரியார் ராமசாமி, பொட்டைமிரட்டல்களால் கவுரவம்வாய்ந்த அறிஞர்களை பயமுறுத்துகிறாராம்! பெரியாரின், "பொட்டைமிரட்டல்" எது? சர். சண்முகத்தின்பாகிஸ்தான்எதிர்ப்புப்பேச்சை அவர் கண்டித்தாரே அது. அதிலே, இந்த அறிஞர்திலகம், பொட்டை மிரட்டலைக் காண்கிறாராம். கவுரவம் வாய்ந்த அறிஞர் யார்? சர். சண்முகம். சர். சண்முகத்தைப் பெரியார், மிரட்டுகிறாராம், அதுமன்னிக்கப்படமுடியாத குற்றமாம், இந்தநீதிபதி தீர்ப்பளித்துவிட்டார். அந்த ஆளின் நினைப்பு எவ்வளவு நிலைகெட்டிருக்கிறது பாருங்கள். ஜனாப் ஜின்னாவிட்டு வாயற்படியருகே காந்தியார் சென்று காத்திருக்கும்அளவு பலம் வளர்ந்துஇருக்கும் பாகிஸ்தான் பிரச்னையை, தூங்கிஎழுந்திருந்தவன்கதைபோல, சர். சண்முகம் எதிர்த்தார், அந்த "உருட்டல்" திராவிடநாடு தனிநாடாவதற்கும், சர். சண்முகம் ஒருப்படவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. பாகிஸ்தான், திராவிடநாடுஎனும் பிரச்னைகளை ஆதரிக்கும் பெரியார், சர். சண்முகத்தின் போக்கை விளக்கினார், கண்டித்தார். "ஆஹா இந்த அக்ரமம் ஆகுமா? சர். சண்முகம் எப்படிப்பட்டவர்தெரியுமா? அவர் "கவுரவம்வாய்ந்த அறிஞர்" என்கிறார் கேசரி. "கவுரவம்" சர். சண்முகத்தைவந்தடைந்ததே, பெரியாரின் பெருந்தொண்டின் பலன்தான் என்பதைப்பித்தரும் எத்தரும் தவிரமற்றையோர் அறிவர். ஏன்? சர். சண்முகமே கூட அறிவார். சர். சண்முகத்தைக்கண்டிக்கப்பெரியார் மட்டுமல்ல, திராவிட இஸ்லாமிய மக்கள் அனைவருக்குமே காரணம்ஏற்பட்டிருக்கிறது. கொச்சி திவான் கோலம்கலைந்து, ஆண்டுகள் ஏறக்குறைய ஆறு ஆகின்றன. இந்தஆறுஆண்டுகளிலே, பாகிஸ்தான்பிரச்னைபலமாகிஇருக்கிறது. கேசரிஅர்ச்சிக்கும் "கவுரவம் வாய்ந்த அறிஞர்" வாய்மூடிக்கிடந்தார். ஏன்? எதிர்த்தால், இருக்கும்"கவுரவம்" காலியாகிவிடும் என்ற அச்சத்தால் என்று கருதலாம் அல்லது நியாயமான இந்தப்பிரச்னையைஎதிர்த்தால் நம்மை 'அறிஞர்' என்றுயாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்களே, என்ற அறிவு அவரைஆட்சிசெய்ததால்என்று எண்ணலாம். அந்தக் "கவுரவம்வாய்ந்த அறிஞர்" கேசரிகளின்கூட்டுறவைப்பெற்று, முடிசூட்டுவிழாசெய்துகொள்ளவேண்டும்என்று எண்ணுவதானால், அந்தக்" கவுரவமும்" "அறிஞர்நிலையும்" சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடுமேஎன்ற பரிதாப உணர்ச்சியினால் தான் பெரியார் சர் சண்முகத்தின் போக்கைக்கண்டித்தாரேயன்றி, சர். சண்முகத்தின்சமயமறியா, சத்தற்ற, சான்றுப் பலமில்லாத தாக்குதலால் பாகிஸ்தான் திராவிடஸ்தான் பிரச்னைகள் பாழாகிவிடும்என்றுபயந்தல்ல. வர்க்கப்போராட்டத்தை வசந்தவாசிகள் வதைத்துவிடமுடியாது. பாகிஸ்தானைத்தானே சர். சண்முகம் கண்டித்தார், திராவிட நாடு பற்றிஎங்கேமறுத்தார் என்று, வக்கீலாகிப்பார்க்கிறார், வம்புக்கு வாழ்க்கைப்பட்ட கேசரியார். இந்தியா துண்டாடப்படக்கூடாது, ஒரேநாடாகஇருக்கவேண்டும், என்று சர். சண்முகம் சொன்னாரே அதனுடைய பொருள்என்ன? திராவிட நாடு தனிநாடாகவேண்டும் என்பதா? இதை அறியஅரசியல் அறிவுவேண்டாம். சாதாரண அறிவு இருந்தாலேபோதும் கேசரிக்குஅதுவுமில்லையே, இந்தியாவைத் துண்டாடக்கூடாது என்ற பேச்சிலே, திராவிடநாடு தனிநாடாகக்கூடாதுஎன்பதுதானே அடக்கம்.

"இரண்டணாதேவை"என்றுகேட்கிறார் கேசரியார்என்றுவைத்துக்கொள்வோம். ஏ, அப்பா, அவர்எப்படிப்பட்டமனுஷ்யர் எப்படிப்பட்டவர்களின் சிநேகத்தைப் பெற்றிருக்கிறார், அவர் கேவலம் இரண்டணாவாகேட்பார், என்றுகேட்கா தீர்கள். ஒப்புக்குவைத்துக்கொள்ளுங்கள், அவர் இரண்டணா கேட்கும்போது, "முடியாது' என்று நான்சொல்லிவிடலாம். அது ஒரு முறை, மற்றோர்முறை, "என்னிடம் ஒரு ரூபாய் இருக்கிறது, அதைநான் முழுசாகவேதான் வைத்துக்கொள்ளப்போகிறேன். சில்லறையாகமாற்றுவதற்கில்லை, மாற்றினால்மொத்தமும் செலவாகிவிடும்" என்றும் சொல்லலாம். இரண்டுக்கும் கருத்து, முடிவு, ஒன்றுதான், இரண்டணா தரமுடியாது என்பதுதான். சர்சண்முகத்தின் சொற்பொழிவு, இரண்டாம் ரகம். நாம் கேட்கிறோம், திராவிடநாடு தனிநாடாக அமைத்து விடுங்கள்என்று, அவரை அல்ல, எப்படி, கேசரியார் என்னிடம் இரண்டணா தரச்சொல்லிகேட்கமாட்டாரோ, அதேபோலத்தான் சர் சண்முகத்தைமக்கள் திராவிடநாடுதாருங்கள்என்று கேட்கவில்லை. ஒப்புக்குஅவரும் கருதிக்கொண்டார், பேசினார்' "இந்தியாஒரேநாடு, அதனைத்துண்டாடக்கூடாதுஎன்று கூறினார், அதன்பொருள் என்ன? "திராவிடநாடு" கூடாது என்றுதானே பொருள் அத்தோடு இல்லையே அந்தக் கவுரவம்வாய்ந்த அறிஞர் "இந்தியா ஒரேநாடு அதனைத் துண்டாடக்கூடாது. பாகிஸ்தான் என்ற துண்டுபோடுவதுகூடாது" என்றும் கூறினார். அதாவதுநான், "கேசரியாரேரூபாயைமாற்றமாட்டேன். அதோ பாலுகூட இரண்டணாகேட்டார். அவருக்கும் தரமறுக்கிறேன்" என்று கூறுவதுபோல என்று வைத்துக்கொள்ளுங்கள். இப்படிப்புட்டுப்புட்டுச் சொன்னால்தான் புரிகிறது, கேசரியாரே என்ன அவ்வளவுமட்டமாகியாவிட்டது உமதுமதி, சர். சண்முகம் திராவிடநாடு எதிர்ப்புப்பேசவில்லை, பெரி

(B-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு.

காஞ்சி 18—3—45 ஞாயிறு

பழைய கம்பெனி!

"கைராட்டையை வேகமாகச் சுற்று! தக்ளியைச்சுழற்று! வெளுத்தகதராடையைப் போட்டுக்கொண்டு, வேகமாகநட! நமது மந்திரி சபைவந்துவிட்டது, எல்லைப்புறத்திலே!" என்று எக்காளமிடுகின்றனர் காங்கிரசார். டாக்டர் கான் சாகிப் மந்திரியாகிவிட்டாராம், சர்தார் அவுரங்கசீப்கானின் பதவி போய்விட்டதாம். ஆனந்தமேலிட்டு ஆடுகின்றனர்பாரதவீரர்கள்! இருந்ததை இழந்துவிட்டு இளித்தவாயராகிப்பிறகு, தேம்பித்தவித்துத்திண்டாடி, மீண்டும் பதவிபெற கடுந்தவம் புரிந்து, பெற்று, பதவிமீண்டும் கிடைத்ததும், "மலடிவயற்றுமகன் போலே ஒருபுதையல் எடுத்ததனம் போலே" அதனைவாரிஅணைத்து, உச்சிமோந்து முத்தமிட்டுக், களிக்கின்றனர். இன்றையக்களிப்பு, நேற்றையக்கவலையைவிளக்குகிறது இதுபோது அவர்கள் காட்டும் குதூகலம், பதவிஇழந்திருந்தபோது அவர்கள் எவ்வளவு குமுறினர் என்பதைஎடுத்துக்காட்டுகிறது. பதவிமீது அவர்களுக்குள்ள மோகம், இதுபோது அவர்களின் ஆனந்தஆலாபனத்தின் மூலம் நமக்கு நன்குதெரிகிறது.

எல்லைப்புறத்திலேமந்திரிசபை ஏற்பட்டதும், இங்கே'தினசரிக்கு' உச்சிமுதல் உள்ளங்கால் வரையிலே களிப்பு! தில்லானா பாடுகிறது தினசரி!! சிந்துவிலே முயன்றால், காங்கிரஸ் மந்திரிசபை ஏற்படுத்தலாம். அசாமிலே, அமைக்கலாம். வங்கத்திலே லீகைக்கவிழ்க்கலாம் பாஞ்சாலத்திலே இப்போதேகூட லீக்மந்திரிசபை இல்லை!—என்றுதினசரி கர்வம்கலந்த களிப்புடன் கூவுகிறது. எவ்வளவு மேன்மையான மனப்பான்மைபாருங்கள்! ஆட்சி ஆட்சி!! பதவி! பதவி! என்றபித்தம் மட்டுமில்லை, லீக்மந்திரிசபையைக் கவிழ்க்கவேண்டும், சிந்துவிலே சிதைக்கவேண்டும் வங்கத்திலே வதைக்கவேண்டும், அசாமிலேஅழிக்கவேண்டும், என்ற சர்வாதிகார வெறியும் இருப்பதைக்காணலாம். லீக்மந்திரிசபைகளைக்கவிழ்ப்பதிலே ஏன், இவ்வளவு மகிழ்ச்சி? லீக்மந்திரிசபைகளைக்கவிழ்த்து விட்டால், லீக்ஒழிந்துவிடும்என்றநினைப்பு. இது ஏமாளித்தனம்! மந்திரிசபைகள்கவிழ்ந்தாலும், நிலைத்தாலும், லீக்வளரும், மேலும் மேலும் வளரும்!! மந்திரிசபைகளைக்கவிழ்த்தானபிறகு, காங்கிரஸ் கலங்கிக்கதறிடும் அளவுக்கு, லீக்பலம்பெறுவதைக்காணலாம். காங்கிரசின் கருத்து, இந்தியாவிலே வேறெந்தக்கட்சியும் தலைகாட்டக்கூடாதுஎன்றசர்வாதிகார வெறிதான், என்று ஜனாப் ஜின்னா கூறியதற்கு, இந்தஎக்காளம், நல்லதோர் சான்றாகிறது.

இனி, எல்லா மாகாணங்களிலுமே காங்கிரஸ்பதவிதேடவேண்டும், துரைமார் கூட்டுமந்திரிசபை ஏற்பட இடமளித்துவிட்டார்கள், எனவே எல்லாஇடங்களிலும் மந்திரிசபைகள்ஏற்படலாம், என்று தினசரி எழுதுகிறது. ஆச்சாரியார் இந்த அழைப்பின்மர்மத்தைஉணர்ந்து, வேலைசெய்யக்கூடும். நமது மாகாணத்திலும், காங்கிரசார்பதவியிலே பழயபடி அமரக்கூடும். வருவதானால், தாராளமாக வரட்டும். நமக்கும், அவர்கள்வந்ததும், நிறம்ப வேலைஇருக்கிறது!! என்று கூறுவதோடு, ஆச்சாரியாருக்குத் தினசரியின் யோசனையைச்சிபார்சு செய்கிறோம்.

போர்ஆரம்பித்ததும்போர்இலட்சியங்களை விளக்கும்படி, பிரிட்டிஷாரைக்கேட்டோம். மறுத்தனர். விலகினோம். இப்போது போர்முடியும்கட்டம் வந்துவிட்டது, எனவே, பழையநிலைமைமாறிவிட்டது. இப்போதுபதவியிலேஅமருவது பொருத்தமாகவே இருக்கும் என்று தினசரி கூறுகிறது. இந்தவாதத்திலே யூகம் இருக்குமளவு மதி இல்லை, ஆசை இருக்குமளவுஅரசியல் அறிவு இல்லை, மோகம் இருக்குமளவுரோஷம்இல்லை. என்றபோதிலும், எதைக் கூறியோ, என்னகாரியம்செய்தோ காங்கிரசைப்பதவியிலே மீண்டும் ஏற்றத்தினசரி பாடுபட விரும்புவதைக்கண்டு, நாமும் களிக்கிறோம்; வரட்டும்அந்தப் 'பழையகம்பெனி' பாக்கிக்கணக்கையும் பைசல்செய்துகொள்வோம்.

—

காஞ்சியில்

செல்வம் நாள்

★

6—3—45ல் காஞ்சி கங்கைகொண்டான் மண்டபத்தருகில் சர். செல்வம் நினைவுநாள் கொண்டாடியபோது திராவிடர் தலைவர் பெரியார் அவர்கள் ஆற்றியபேருரையின் சாரம்.

தோழர்களே! இன்று நாம் எல்லோரும், திராவிடர்கள், நம்மொழி திராவிடமொழி, நம்கலை திராவிடக்கலை, நம் நாகரிகம் திராவிடநாகரிகம் என்று எடுக்காட்டியும் கூறியும் வருகிறோம். நமதியக்கத்திற்கு எங்கும் பேராதரவு கிடைப்பதையறிந்த சிலகோடறிக்காம்புகள் நம்மையிழித்தும் பழித்தும் பேசிவருகின்றனர். சேலத்தில் நடந்த ஒருகூட்டத்தில் தமிழ்நாட்டு இந்து மகாசபைத்தலைவர் டாக்டர் வரதராசலுநாயுடு என்பவர் ஆரியர் திராவிடர் என்ற அர்த்தமற்ற வாதத்தைச்சில்அறிவிலிகள்கிளப்புகின்றனரென்றும், ஆரியர் திராவிடர் என்ற இருதனி இனங்களில்லையென்றும், எல்லோரும் ஒன்றாய் இணைந்துவிட்டனரென்றும் பேசினார். நாட்டுவளப்பம்தெரியாதவர்கள்அறிவிலியா, நாம் அறிவிலிகளா? அல்லது கண்டும்காணாததுபோல், அறிந்தும் அறியாததுபோல் அபிநயிக்கும்ஆட்கள் அபத்தரா? எங்கே ஒன்றுபட்டுவிட்டது? ஓட்டலுக்குச் சென்று பாருங்கள். பிராமணாளுக்கு மாத்திரம் என்று குறிப்பிட்ட தனி இடத்திற்குச் செல்பவன் ஆரியன்மற்றவர் திராவிடர். கடவுளைக்காட்டி காசுபறிப்பவன் ஆரியன், வெளியில் நின்று வேடிக்கைப் பார்த்து, கொண்டுபோனபொருளைக் கொட்டிக்கொடுத்துவிட்டுவெறுங் கைகளோடு வீடுதிரும்புகிறவர் திராவிடர், அக்கிரகாரத்தில் வசிப்பவன் ஆரியன், அதற்குப்புறம்பே வாழ்பவர் திராவிடர். தண்டனிட்டுத் தட்சணை தானம், தருமம்செய்பவர் திராவிடர், தண்டத்திற்கழும் தானத்தைப்பெற்றுச் செல்பவன் ஆரியன். இவைகளை யாவும் மதக்குப்பையில் மங்கிக்கிடக்கும் ஆரியரிடம் அறிவை அடகு வைத்திருக்கும் இந்துமதத்தை ஆதரிக்கும் உண்மையில்தான் ஒரு இந்து என் எண்ணும் டாக்டர் நாயுடு தெரிந்துகொள்ளாதது ஆச்சரியமல்ல.

இந்து என்ற பதமும் அதன் போரால், ஒருமதமும் யாரால், எப்பொழுது எப்படி, ஏன் உண்டாக்கப்பட்டது என்பதற்கு இதுவரை எந்த ஆராய்ச்சியவல்லுநர்களும், எத்தகைய நூல்களிலும் ஆதாரமிருப்பதாகக்கூறவில்லை. ஆனால் அந்தப் பெயரை பெரும்பாலான நாம் ஏற்றுக்

(B-பக்கம் பார்க்க)

செல்வம் நாள்

A-பக்கத் தொடர்ச்சி

கொண்டது முதல் நாளது வரை ஒரு சிறுகூட்டத்தினருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். ஆலயங்கள் அமைத்தவர்கள் நாம், ஆண்டவனை அர்ச்சிப்பவர்கள் அவர்கள், கும்பாபிஷேகம் செய்வது நாம், கூடிப்புசிப்பவர் அவர்கள். உழைத்து உழைத்து போதிய ஊதியம் பெறாமல் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் இன்றித் தவிப்பவர்கள் நாம், ஒரு வித உழைப்புமின்றி அறுசுவை அமுதுண்டு, மாடமாளிகைகளில் மஞ்சத்தில் புரண்டு உறங்குபவர் அவர்கள். நாரும் நரம்பும், எலும்பும் தோலுமே நம்மவரின் தோற்றம், மத யானைபோல் பருத்து கொழுத்த மாமிசப்பிண்டம் போன்றதல்லவா நம்மவர் தோற்றம். பங்காயிழுத்தல், பில்லைச்சேவகம் போன்ற சிறுவேலைகளே நமக்கு, பாங்கியருடன் கைகுலுக்கிப் பெரும் பெரும் பட்டங்கள் பெறும் சிறந்த பதவிகள் அவர்களுக்கு. தோழர்களே! இந்நிலை மாறவேண்டாமா? எத்தனை காலந்தான் இக்கொடுமைகளைச் சகித்துக்கொண்டிருப்பது? நமக்கு அறிவில்லையா? ஆற்றலில்லையா? நமது குறைகளைக் கூறிக் கொள்ளுதல், குற்றமாகுமா? வீரவாலிபர்களே! விழியுங்கள் விடுதலைபெறவழி தேடுங்கள், விரோதிகளிடம் தஞ்சம் புகுந்த விபீஷணர்போன்ற விசித்திரப் பிறவிகளின் விபரீதப் போக்கை விஷமப் பிரசாரத்தை விலக்குங்கள், நாட்டுமக்களிடம் நம்நோக்கத்தை நன்றாய் விளக்குங்கள்.

தோழர்களே நாம்சமுதாயத்தில் மாத்திரம் ஆரியருக்கு அடிமைப்பட்டிருக்கவில்லை. அரசியல் பொருளாதார இயல் மற்றெல்லாத் துறைகளிலும் நாம் அவர்களுக்கு அடிமைப்பட்டேயிருக்கிறோம்.

இன்று நம்மை ஆங்கிலேயர் அடக்கி ஆண்டுவருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அல்லவே அல்ல. ஒப்புக்குத்தான் அப்படி. ஆனால் உண்மையில் ஆரிய ஆட்சிதான் நடைபெற்றுவருகிறது. சர்க்கார் கையாளும் சட்டங்கள் யாவும் மனுமுறைகளையே அடிப்படையாகக்கொண்டது. வெளிப்படையாகவும் கூறப்பட்டிருக்கிறது.

திராவிடநாடு தனிநாடாகக் கூப்பட்டாலொழிய வெளிநாட்டுச் சுரண்டுதலையழிக்கமுடியாது. வீரஇளைஞர்கள் யாவரும் பிரிவினைக்குப்போராட இன்றே முனையவேண்டும், முன்வரவேண்டும். திராவிடர்கழகத்திற்கு பெருவாரியாக மக்கள் சேர்க்கப்படவேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் எனப் பேசிமுடித்தார்.

கூட்டத்திற்குச் செங்கற்பட்டு மாவட்ட மன்றத் தலைவர் தோழர் சண்முகம் அவர்கள் தலைமைவகித்தார். தோழர்கள் அ.க. தங்கவேலர், மு. இரங்கசாமி, போளூர் சுப்பிரமணியம், வெங்கட்ராமன் முதலியோரும் பேசினர். தோழர் அண்ணாதுரை நன்றிகூறியபின் கூட்டம் இனிது கலைந்தது.

இக்கூட்டத்தை நடத்தத் தோழர் C.V.M. அண்ணாமலையும் அவர் நண்பர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பெரிதும் போற்றத்தக்கது.

கரூர்

—3—45ல் இவ்வூர்த் திராவிடர்கழகத்தின் ஆதரவில் தோழர் சி. கோவிந்தசாமி தலைமையில் சர். செல்வம் நினைவுநாள் சிறப்புடன் நடந்தபோது இந்நாட்டைச் சேர்ந்திருந்ததைப் பூர்த்தியாக்கும், கழகக் கொடி நிதி நிரப்ப வேலை ஆரம்பிக்கவும், கரூர் திராவிட மாணவர் மாநாடு நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செங்கற்பட்டு ஜில்லாபோர்டு

:(o):

31—3—45ல் நடைபெற இருக்கும் ஜில்லாபோர்டு கூட்டத்தில், முக்கியமான [illegible] இருக்கின்றன.

1. கட்டாயக் கல்வியைப் பரப்பத் திட்டம்.
2. ஏழை மாணவர்களுக்கு இலவசப் பகல்சாப்பாடு.
3. மாதம் 70 ரூபாய் சம்பள 15 ரூபாய் அலவன்ஸ், ஆகி, 20 பாடசாலைகளுக்கு ஒருவர் என்ற முறையில் சூப்பர்வைசர் நியமிக்கும் யோசனை.

கல்விவளர வழிசெய்யும் நோக்குடன் இதுபோன்ற திட்டங்களை கொண்டுவந்திருக்கும் செங்கல்பட்டு ஜில்லாபோர்டு தலைவர் T. சண்முகம் அவர்களைப் போற்றி அவர்தம் திட்டங்களை ஆதரிக்கிறோம்.

நமது தலைவர் பேட்ஜ்

நமது தலைவர் பெரியாரின் உருவம் அமைத்த பேட்ஜ் அழகியவடிவில் வெளிவந்துள்ளது. ஒன்றின் விலை 0—1—0 தேவைக்குள் முந்துக. தக்கலாபமுண்டு.

நமது இயக்க எல்லாப்பத்திரிகை ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

திராவிடன் பதிப்பகம்,
133 லாங்குபசார் வேலூர் (வடஆர்க்காடு)

சவுண்டிகளுக்கு

8ம் பக்கத் தொடர்ச்சி

யார் இட்டுக்கட்டிப்பேசுகிறார் என்று என்னமோ துள்ளிக்கொட்டுகிறீரே, இந்தியா ஒரே நாடாக இருக்கவேண்டும் என்று சர். சண்முகம் சொன்னாரே, அதனுடைய பொருள் என்ன? இந்தியா ஒரே நாடாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்தும் சர். சண்முகம், திராவிடநாடு தனிநாடாவதை எதிர்க்காமல் வேறென்ன செய்கிறார், அட இழவே ஏனய்யா, இப்படி "டல்" லாகிவிட்டீர்? "கவுரவம்வாய்ந்த அறிஞர்களின்' கூட்டுறவின்விளைவா? இனத்துக்குக்கேடுசெய்யும் திட்டம்தயாரிக்கும் கும்பலுடன் சேர்ந்ததன்பலனா?

"இது நான்யார் தெரியுமா, தேசீயமாகும்," என்று காஜிக்காதீர், இப்படித் துள்ளவர்கள் அவ்விதமான காரியங்களைச்சட்டைசெய்யமாட்டார்கள். தலைவர்களின் பேச்சுகளிலே இருந்தெடுத்துப்பருகிய ரசபானத்தை (அரசியல் பானத்தைமட்டுமே நான் குறிப்பிடுகிறேன்.) உட்கொண்டதால், அவர்கள் அடியதைக்கக்காதீர், காஜியும் வேண்டாம், கக்கவும் வேண்டாம், ஆற அமர யோசித்துப்பேசும், நிதானம் பிறந்தபிறகு பேசும், இப்படி சிந்திக்கிறீரே, இது தகுமா, முறையா?

அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சித்திரைப் பள்ளிக்கூடம்.

1945 எப்ரல் மாதம் 20ம் தேதியிலிருந்து 6-வாரங்கள் வகுப்புகள் நடைபெறும். படிப்பைமத்தியில் நிறுத்தியவர்களும், எதற்கும் வேலையில்லாதவர்களும் இவ்வகுப்பில் சேர்ந்து படிக்கலாம். அவசியமான பாடங்கள் குறுகிய காலஅளவில் சொல்லிக்கொடுக்கப்படும். தங்குமிடம் [illegible] மல் கிடைக்கும். சாப்பாட்டுச்செலவு மாதம் ரூ. 20/—, விவரம் வேண்டுவோர்கள் எப்ரல் மாதம் 10ம் தேதிக்குள் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர் என்ற முகவரிக்கு மனுச்செய்துகொள்ளலாம்.

'சவரம்' தெரியாது

(இலக்கு)

"ஆரியர்கள் வருவதற்குமுன் திராவிடர்களுக்கு 'சவரம்' செய்துகொள்ளும் முறை தெரியாது. சவரத்தொழிலையே திராவிடர்க்குக்கற்பித்தவர்கள் ஆரியர்கள் தாம், சவரம் என்றசொல்லும் தமிழ்ச்சொல்லல்ல. அத்தொழிலைக்குறிக்கக்கூடிய தமிழ்ச்சொல்லும்இல்லை. அந்தத்தொழிலைச்செய்யும் தொழிலாளரைக் குறிப்பதற்கும் தமிழ்ச் சொல்இல்லை, ஆகவே, திராவிடர்கட்குச் சவரம் செய்தலைக் கற்பித்தவர்கள் ஆரியர்கள்தாம்என்பதில் எட்டுணையும்ஐயமின்று," என்றுவரலாற்றுஆசிரியர் பி. டி. சீனுவாசஐயங்கார் தமிழர் வரலாறு (Histories of the Tamils)என்றபுத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். அதையே, நம்மவர்க்காகஉழைக்கும் நம் லிபரேட்டர்! என்னும்ஆங்கிலச்செய்தித்தாள் மார்ச்சுமீ நான்காம நாள் ஞாயிறு வெளியீட்டில் பழங்கால ஆராய்ச்சிகள் என்றதலைப்பின்கீழ் முதலிடத்தில்கொண்டுவிளங்குகின்றது. அவர் கூறியதை அம்பலப்படுத்துவோம் அம்பலப்படுத்திஅவர் அறியாமையை வெளிபடுத்துவோம்என்ற கருத்துடன் தான்வெளியிட்டிருக்கவேண்டும், அவர்கூறியது உண்மைதான்! ஆரியர்வருவதற்குமுன் தமிழர் 'சவரம்' அறியாக்காட்டு மனிதர்களாகத் தான் வாழ்ந்திருக்கவேண்டும் என்றுகருதி அவ்வுண்மையைத்தமிழர் அறியட்டும என்று வெளியிட்டிருக்க மாட்டார் அதன் ஆசிரியர்.

இனி ஐயங்கார்கூற்றைஆராய்வோம். சவரத்தொழிலையும் அத்தொழிலாளர்களையும் குறிக்கக்கூடிய தமிழ்ச்சொற்கள் இல்லாததால் தமிழர்கள் அவ்வழக்கத்தை அறியார் என்கின்றார். அவர் பிராமணர் ஆதலின், தமிழர்களுடன் கலந்து உறவாடாததனால். தமிழர்கள் சவரத்தை எந்தச் சொல்லால் குறிப்பிட்டனர்—குறிப்பிடுகின்றனர்என்பதை அறியவில்லை. பண்டைத்தமிழிலக்கியங்களை நன்றாகப் படியாததனால் தமிழிலக்கியங்களில் அத்தொழிலைப் பற்றிக்கூறப்படும் குறிப்புகளையும் அறிந்திலர். உலகவழக்கில்,'சிறைத்தல் Shaving)முடிவெட்டுதல்(Crop ping) மொட்டையடித்தல், 'முடியெடுத்தல் முதலிய சொற்கள் பயில்வதைத தமிழ்நாட்டின் எந்தமூலைக்குச்சென்றாலும்அறியலாம். ஆரியர்கூட்டுறவற்றபழந்தமிழர்கள் இச்சொற்களையே இன்னும்வழங்குகின்றனர்.

பண்டைத்தமிழிலக்கியங்களில் பல [illegible] கத்தரித்து [illegible] இடைதொட்டகார்க்கவின் பெற்ற ஐம்பால்" (கத்திரிகை இடையிலே திண்டியமேகத்தின் அழகினைப்பெற்ற ஐந்துபகுதியையுடைய மயிர்) என்றும், 'வாளிடைப்படுத்த வயங்குஈரோதி' (கத்திரிகை இடையிட்ட விளங்குகின்ற. எண்ணெய் தடவிய மயிரையுடையவளே) என்றும் வருகின்ற இடங்களில்மகளிரும் அக்காலத்துத் தம்மயிரைக் கத்தரித்து அழகு செய்துகொண்டனரென்று அறிகின்றோம். இன்னும் புறநானூற்றில் 'குடுமிகளைதல்' கூறப்படுகின்றது.ஆகவே உலகவழக்கினும் நூல்வழக்கினும் சவரத்தைப்பற்றிய தமிழ்ச் சொற்கள் மலிந்துள்ளதால், அவர்கூறும் காரணம் பொருந்தாது.

சவரம் செய்பவர்களைக்குறிப்பதற்குத் தமிழ்ச்சொல் உண்டா என்றால் இல்லைத்தான். இப்பொழுது அவர்களைக்குறிக்கும் சொற்கள் ஆரியச் சொற்கள்தாம். என் தமிழ்ச் சொற்களில்லை? பண்டைத் திராவிடர்கள், பிறப்பொக்கும் எல்லா உயிர்களுக்கும்' 'ஒன்றே குலமும்' என்ற கொள்கையை உடையவர்கள். தொழிலால் மக்கள் வேறுபடினும் பிறவியினால் உயர்வு தாழ்வு அறியாதவர்கள்.தொழிலினும் உயர்வு தாழ்வு புகுத்தாதவர்கள். உழவனும், ஆசிரியனும், தொழிற்சிறப்பால் வேறுபடினும் குடிச்சிறப்பால் ஒத்தவர்களே. தொழிலால், அத்தொழில் செய்பவர்களைக் குறிப்பிட்டனரேயன்றி, அத்தொழிலைச் செய்யாதிருந்தாலும் பிறவியால் அத்தொழிலினராகக் கருதியது கிடையாது. இன்றும், பிராமணன் ஒருவன்முடிவெட்டும் தொழிலைச் செய்தாலும், அவனை நாவிதன் என்று அழைப்பதில்லை. நாவிதத்தொழிலைச் செய்தவனுக்குப்பிறந்த ஒருவன்வழக்கறிஞராய்இருந்தாலும், அவனை நாவிதன்என்றேஅழைக்கின்றனர். இது ஆரியரால் ஏற்பட்ட கேடு. ஆகவே பண்டைநாளில்முடிவெட்டும்தொழிலைச்செய்பவன், முடிவெட்டுபவன் என்றே அழைக்கப்படுவான். அத்தொழிலைச்செய்யாவிட்டால் அப்பெயர் அவனுக்கில்லை. அதனால் பண்டைநாளில் அதற்கென ஒரு சாதிஇல்லை. எவரும்எத்தொழிலும்செய்யலாம். தொழில்பற்றிப் பிறவிஇல்லை, பிறவியினால் தொழில் இல்லை. இதுதிராவிடர்முறை. பண்டைத் திராவிடநாட்டில் முடிவெட்டும்தொழில் இருந்தது. அதற்கென ஒருசாதிஇல்லை. அச்சாதியைப்பற்றிய தமிழ்ப் பெயரும் இல்லை. அதனால் ஐயங்கார் கூறும் காரணம் பொருந்தாது.

வெளித்தோற்றத்தில் நாகரிகமானவன் என்றுசொல்வதற்கு மூன்றுதொழிலாளர் இன்றியமையாதவர். துணிவெளுப்போர், முடிவெட்டுவோர், தையல்காரர்: இம்மூத்தொழிலாளரும் பண்டைத் திராவிட நாட்டிலிருந்தனர். [illegible] பண்டைத் திராவிட நாகரிக முறையிலேயே [illegible] இருந்தனர். அவ்[illegible]

ஆரியர்கள் தாம்வெளித்தோற்றத்திலும் நாகரிகமற்றவராய், முனிபுங்கவர் என்ற முடிநிறைந்த காட்டுமனிதராய் அழுக்கு நிறைந்த பழுப்பாடைஉடுத்தி, வாழ்ந்து திராவிடருடன் கூட்டுறவு ஏற்பட்டபிறகு நாகரிகத்தோற்றம் பெற்றிருக்கவேண்டும்! ஒருக்கால், வெளிநாட்டிலிருந்து வந்த அவர்கள் வேறு தொழில் இன்மையால் முதலில் இத்தொழிலைமேற்கொண்டனரோ? என்னவோ அறியோம். அதை ஐயங்கார் தான்கூறவேண்டும்.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய சிலஉண்மைகள் உள. 1. தமிழ்ச்சொற்களிருக்க ஆரியச் சொற்களை வழங்குதல்கூடாது. அவ்விதம் வழங்குவதால், தமிழ்ச்சொற்கள் வழக்காற்று மறைந்து, ஆரியச்சொற்கள்நிலவித், தமிழர்களுக்கு நாகரிகத்தைக்கற்பித்தவர் ஆரியர் என்று கூற இடமுண்டாகிறது. ஆகவே சொற்களிலும்ஆரியத்தைஒதுக்கவேண்டும்.

2. பிராமணர்களை ஆராய்ச்சிநிலையங்களில் அமர்த்துதல்கூடாது. பிராமணர்கள் எழுதும் ஆராய்ச்சி நூல்களில் எல்லாம் ஆரியர்களிடமே தமிழர்கள் நாகரிகத்தைக்கற்றுக்கொண்டனர்என்றமுறையில் குறிப்பிடுவதைக்காணலாம். தமிழ் ஆராய்ச்சிக்கூடங்களில் ஆரியர்களைஅமர்த்துதல்கூடாதுஎன்று கிளர்ச்சிசெய்தல் வேண்டும்.

அந்த வியாதி!

3-ம் பக்கத் தொடர்ச்சி

சுயசிந்தனையை இழந்துவிடுவதுதான், நாஜிசமூமாகும், அந்த வியாதியின்பயனாக, விஞ்ஞானத்திலே சிறந்த ஜெர்மன் மக்கள், என்னகதிக்கு ஆளாகிவிட்டார்கள்? அழிகிறார்கள்! ஜெர்மனிவனாந்திரமாகிவருகிறது. எதிர்காலத்திலே ஜெர்மானியன் என்றுகூறிக்கொள்ள வெட்கப்படுவார்கள். அவ்விதமானகேடு, இந்த வியாதியினால் ஏற்படும். எனவேதான் இங்கு காந்தியார்மூலம் பரவிவரும் அந்த வியாதியை நீக்கியாகவேண்டும் என்று கூறுகிறேன். இதற்கு நமது இயக்கம் மேலும்மேலும் பலப்படவேண்டும், பரவவேண்டும்.

எச்சரிக்கை

4-ம் பக்கத் தொடர்ச்சி

அறிக்கை விட்டிருக்கும் அன்பருக்கு, நாம், ஆரியத்தை மத விஷயத்திலே, இருக்க இடமளித்த எந்த மன்னனும், வாழமுடியாது, எந்த அரசியலும் பயன்படாது, நிலைக்காது, நாட்டு மக்களால் ஆதரிக்கப்படும் நிலை பெறாது, என்றுஎச்சரிக்கிறோம். இவ்வெச்சரிக்கையைஅவர் பொருட்படுத்தினால் [illegible]

பசிபிக்கில் இனி நிகழும் சம்பவங்கள்

———

கீழ்க்கோடியில் இனி நிகழவேண்டிய நிகழ்ச்சிகளை பிரிட்டிஷ் கடற்படைக் காரியாலயம் தீர்மானித்து விட்டது. உக்கிரமான தாக்குதலுக்குப் பேர்போன வரும் ஷான்ஹார்ஸ்ட் கப்பலைமூழ்கடிப் பதற்கும் பிரிட்டிஷ் கப்பல்கூட்டம் ரஷ்யா செல்வதற்கும் பொறுப்பாளியா யிருந்தவருமான அட்மிரல் ஸர்ப்ரூஸ்ப் ரேஸர் பிரிட்டிஷ் பசிபிக்கடற்படையின் தலைவராகப் பதவியேற்பதற்குப், புறப் பட்டுவிட்டார். சிங்கப்பூர் வீழ்ச்சிக்குப் பிறகுகீழ்த்திசைக் கடற்படை தங்குவ தற்கு இடமாயிருந்த ஆஸ்திரேலியா இப் போது பிரிட்டிஷ் கடற்படையின் தாக் குதலுக்குஆதாரமாய்விட்டது.பிரிட்டிஷ் கடற்படை தன்னளவிலேயே மலேயா தீவுகளின் இருபக்கத்திலிருந்தும் ஜப்பா னியரைத்தாக்கக்கூடிய நிலையில் இருப்ப தாகத் தெரிகிறது. கடற்படைமந்திரியே இதை ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார். அவ ருடைய வார்த்தைகளிலிருந்துபிரிட்டிஷ் கப்பல்கள் ஜப்பானுக்கு மிகவும் அரு காமையிலுள்ள கடற்பிரதேசத்திலேயே போர்புரியுமென்று தெளிவாய்த் தெரி கிறது.

கிழக்கிந்தியக்கடற்படையுடன் இருந்து வந்த நான் சீக்கிரத்திலேயே அட்மிரல் ப்ரேஸரின் படைகளோடு சேர்ந்துவிடு வேனென்று எண்ணுகிறேன். பசிபிக் கடலில் போர்க்கப்பல்கள்,விமானந்தாங்கி கள், க்ரூய்ஸர்கள், காவலாய்ச்செல்லும் நாசகாரிகள் போன்ற பெரிய கப்பல் களுக்குத்தான் அவசியமிருக்கிறதென்று கூறலாம். அங்குள்ள கடற்படையில் பல ரவீனரகங்களும் இருப்பதாக மி.சர்ச்சில் சபையில் கூறினார். இவற்றின் பலனாக இந்தக்கடற்படை முக்கிய கரைத்தளங் களை அதிகமாய் நம்பவேண்டியிருக்காது. ஆகவே, அதை ஆஸ்திரேலியாவைத்தளமாய் வைத்துக்கொண்டு வேண்டிய போது போய்த்தாக்கிவிட்டுத் துரிதமாய் ஆஸ்தி ரேலியாவுக்குத் திரும்பி விடுமென்று நினைக்கக்கூடாது. சேர்ந்தாற் போல் பலவாரங்கள் யுத்த மண்டலத்திலேயே பிரிட்டிஷ் கப்பல்கள் இருக்கக்கூடிய காலம் வந்துவிட்டது. மலேயாவுக்கு மேற்கே ஜப்பானியக் கடற்படையுடன் கைகலப்பைஎதிர்பார்க்கமுடியாதுதான், ஜப்பானியர்கள் இந்துமகா சமுத்திரத் தைச்செலவுக்கணக்கில் எழுதிவிட்ட தாய்த் தோன்றுகிறது. அங்கேபிரிட்டிஷ் போர்க்கப்பல்களே ஆதிக்கஞ் செலுத்தி வருகின்றன. ஆயினும் கிழக்கு இந்தியத் தீவுகளின் நிலையத்தில் கப்பல்கள் செய்ய வேண்டிய காரியம் இன்னும் அதிகமாய் இருக்கிறது.

இந்துமகாசமுத்திரத்தில் எந்தச் சம ...வும் 20 லக்ஷம் டன் கப்பல்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இவற்றை நீர்மூழ்கிகளிடமிருந்து காப் பாற்றியாகவேண்டும். 1945ல் நடக்கப் போகும் பெரியதாக்குதலுக்குப்பெருத்த அளவில் நிர்மாணவேலைநடந்துவருகிறது. தாக்குதல் எப்போது நடக்குமென்று நான் ஜோஸியங் கூறப்போவதில்லை. ஆனால் உடனடியாகப்பெரிதாய் ஒன்றும் செய்யமுடியுமென்று எதிர்பார்க்கக் கூடாது. இரண்டுகடல் களிலும் வன்மை வாய்ந்த, கடற்படைகளைச் சேகரிப்ப தற்கே இப்போது முடிவுசெய்யப்பட்டி ருக்கிறது. அடுத்த சிலமாதங்களில் பல திசைகளிலும் தீவிரமான தாக்குதல் களைக் காணலாம். ஆனால் அவைகளும் கடைசி வெற்றிக்கு அனுகூலமான ஆரம்ப வேலைகள்தான். இதற்கிடையில் கீழ்க்கோடியில் பிரிட்டிஷ் கடற்பலம் பெருகிக்கொண்டேபோகிறது.இன்னும் பல விமானந்தாங்கிகள் போய்ச்சேரப் போகின்றன, அவற்றுடன் ஏராளமான க்ரூய்ஸர்களும் நாசகாரிகளும் இதர கப்பல்களும் சேருமென்று எதிர்பார்க் கலாம். சீக்கிரத்திலேயே பிரசித்திபெற்ற அட்மிரல்களையும் அங்கேஎதிர்பார்க்கலாம் உலகத்திலுள்ள பெரிய கப்பல்களெல்லா வற்றையும் மிஞ்சிவிட்டபிரிட்டிஷ்போர்க் கப்பலொன்று ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாகச் செய்தியும் வந்திருக்கிறது, அந்தக்கப்பல் உஷ்ணப் பிரதேசத்தில் இருக்குமென்றுகடற்படை மந்திரி கூறியிருக்கிறார். அப்படியென்றால் அது ஜப்பானியப் போராட்டத்துக்கு உதவுமென்றுதான் அர்த்தம்,

———

அங்கும் இங்கும்

குண்டூரில், தோழர்குருவையா என்ற செல்வவான், அவர் ஊரில் ஓர் கல்லூ ரிக்கு 40000 ரூபாய் நன்கொடை தந் தார்.

காஞ்சிபுரத்திலே, வியாபாரிகள்ஏகாம் பரேசுவரருக்குப்பிரம்மோற்சவம்நடத்தத் தாராளமாகப் பணம் தந்தனர். அங்கு அறிவு பாழாகிறது! இங்கு அதிர்வேட்டு கிளம்பப்போகிறது! அங்கு மக்களின் அறிவுக்கண் திறக்கப்படுகிறது! இங்கு, நடமாடும் தேவர்கள் நாதியற்றுக்கிடக்க படமாடும் தேவன்பேரால் பால் பருப்பு பருகிடப் பார்ப்பனக்கூட்டம் பவனி வரப்போகிறது. காஞ்சியே, குண்டூரைப் பார்! குண்டூரே, காஞ்சியைக்கண்டு, கை கொட்டிச்சிரி என்று கூறுகிறான் நமது ஆபீஸ் பையன்.

— —

திராவிடர் மாநாடுகள்

சென்னையில்:— ஏப்ரல் முதல்தேதி.
காரைக்குடி:— 8—4—45.
கரூர்:— (திராவிட மாணவர் மாநாடு) ஏப்ரல் முதல்வாரம்.

தென்னிந்திய கைத்தறித் தொழிலாளர் மாநாடு

தென்னிந்தியகைத்தறித்தொழிலாளர்மா நாடு 13-3-45ல்காஞ்சிபுரம் கண்ணன்டாக் கீசில் முன்னாள் அமைச்சர் தோழர் இரா மநாதன் அவர்கள் தலைமையில் சிறப்ப டன் நடந்தேறியது. காஞ்சிபுரம் தோழர் அ. க, தங்கவேலர், வரவேற்புரை நிகழ்த் தினார். கோவை, "கூட்டுறவு" ஆசிரியர் தோழர் இலட்சுமணன் அவர்கள் கொடி ஏற்றுவிழாவாற்றினார். மங்களூர்தோழர் ஷெட்டி அவர்கள், துவக்குவிழாச்சொற் பொழிவாற்றினார். பொதுவாகக் கைத் தறித்தொழிலாளருக்குள்ள கஷ்டங்கள், போரின் காரணமாக ஏற்பட்ட புதுச்சிக் கல்கள், பொருளாதாரப் பிரச்னைகள், ராட்டை இயக்கத்தின் சேட்டைகள், காந்தீயக்கேடுகள் என்பனபற்றித்தலைவர் இராமநாதன் அவர்கள்விளக்கிப்பேசினார். கைத்தறித்தொழிலாளர் நலனுக்கான தீர் மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. தோழர்கள் C. N. அண்ணாதுரை, காஞ்சி கலியாணசுந்தரன் C.V.M. அண்ணாமலை, அப்துல்காதர், முத்துசாமி, செங்கல்வ ராயன் சேலம் தோழர் தன பால், மாணிக்கம் ஆகியோரும் மற்றும் பலரும் தீர்மானங்களை ஆதரித்துப்பேசி னர்.

இரவு 7-மணிக்குஆடிசன்பேட்டையில் தோழர் தங்கவேலர் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம்நடைபெற்றது, தோழர் கள் இராமநாதன், கலியாணசுந்தரன், அண்ணாதுரை ஆகியோர் சொற்பொழி வாற்றினர்.

———

சர். A. T. பன்னீர் செல்வம் நினைவு நாள்

10—3—45 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு எ. வி. பரிசுத்தநாடார் தோட் டத்தில் தஞ்சைத் திராவிட வாலிபர் கழகத்தின் சார்பில் திருச்சி வழக்கறிஞர் தோழர் டி. பி. வேதாசலம் அவர் கள் தலைமையில் திராவிடர் தலைவர்பெரி யார் ஈ.வே. இராமசாமி,கரந்தைப்புலவர் பெரியசாமி, குடந்தை தோழர் கே.கே. நீலமேகம் எஸ். தவமணிராசன், துறை யூர் மா. பெரியசாமி முதலியோர்சொற் பொழிவாற்றினர். ஆயிரக்கணக்கானமக் கள்கூடியிருந்தனர். தலைவர் முடிவுரைக் குப்பின் நன்றிகூறலுடன்கூட்டம்இனிது முடிந்தது.

———

1945ம் ஆண்டு மார்ச்சு மாதம் 7ந் தேதி கோவைகுணியமுத்தூர்திராவிடர் கழகத்தின் சார்பில் மறைந்த மறத்தமிழர் பன்னீர் செல்வம் அவர் களது நினைவுநாள் இரவு 9-மணிக்கு கொண்டாடப்பட்டது: அவ்வமயம் தோ ழர் கே. எ. பழனியப்பன் அவர்கள்தலை மை வகித்தார். தோழர்கள் கருப்பண் ணன், ராமசாமி, ராமநாதன், ஆறுமுகம், முதலியவர்கள் தன்மதிப்பு இயக்கப் பாட்டுகளும் பன்னீர் செல்வம்நினைவுப் பாட்டுகளும் பாடினார்கள்.

தேவ லீலைகள்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

நெஞ்சழுத்தம்! நான் காமுகனா? பிறன் இல்லம் நுழைபவனா! பேதாய்! பெருங் கடவுளரிலே ஒருவனாகிய என்னிடம் மோகம்கொண்டாயே, தகுமா, முறையா? பிடி, சாபம்!" என்று மகாவிஷ்ணு, மிரட்டினார் என்று எண்ணிடத்தான் எவருக்கும் தோன்றும். ஆனால் நடந்தது அது வல்ல! தன்னிடம் மையல்கொண்ட இந்திராணியை நோக்கி, மஹாவிஷ்ணு "இச்சைக்கினிய இந்திராணியே! இங்கே உன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்துவைக்க இயலாது. பூலோகத்திலே, நான், கிருஷ்ணனாக அவதாரமெடுக்கப்போகிறேன். அதுசமயம் நீயும், பூலோகத்திலே, இராதையாக அவதரித்திடு, உன் மனோபீஷ்டம் நிறைவேறும்" என்று அருளிச்செய்தாராம், அதுபோலவே, விபசார நோக்கங்கொண்ட இந்திராணி, ராதையாகப் பூலோகத்திலே பிறந்து, நாராயணனின் அவதாரமாகிய கிருஷ்ணனிடம், சுகசல்லாபமாக வாழ்ந்ததாகப் புராணம் கூறுகிறது. இப்படிப்பட்ட இந்திரன் இந்திராணி என்பவர்களைத்தான், இந்துமார்க்க சிகாமணிகள் என்போர், கடவுள்பட்டியிலே சேர்த்து வைத்துக்கொண்டுள்ளனர். ருக்வேதத்திலே, இந்திரனைக்குறித்துப்பல சுலோகங்கள் உள்ளன. காமுகனை, பிறன்இல்லம் நுழைபவனை, சோரம் போனவளை மனைவியாகக்கொண்டவனைத் தேவர்க்கரசன் என்று, வெட்கமின்றிக் கூறிக்கொண்ட ஆரியக்கூட்டத்தின், அந்நாள் மனப்பான்மைகூடக் கிடக்கட்டும். இன்றும், ஆரியர்கள், இந்திராதி தேவர்களை, இஷ்டசித்தி மூர்த்திகளென்று பூஜித்து வணங்கிப்பலன்பெறவேண்டுமென்று உபதேசிக்கவும் துணிகின்றனர். அவர்களின் துணிவு காணும்போது, கோபம் பிறக்கிறது ஆனால், அந்தப்பேச்சைநம்பி, இவ்வளவு இழிதன்மைகளைக் கொண்ட கதைகளை நம்பி, மனிதத்தன்மையும், புனிதத்தன்மையுமற்ற கற்பனைகளைக் கடவுள்கள் என்று கருதும், நமது பாமரமக்களின் ஏமாளித்தனத்தைப்பார்க்கும்போது, நமக்குப்பரிதாபம் பிறக்கிறது.

இந்திரனுடைய இலட்சணந்தான்இப்படி என்று எண்ணிவிடுவதற்கில்லை. ஆரியர்களின் பட்டியிலே காணப்படும்வேறு தேவர்களின் குணாதிசயங்களும், இதற்கு இம்மியும் குறைந்ததாகக்கூறுவதற்கில்லை. ஒருதேவனை மற்றோர் தேவன், தோற்கடிக்கிறான்! எதில்? தூய்மையிலா? வாய்மையிலா? கடவுட்தன்மையிலா? நீதி நேர்மையிலா? தயை தர்மத்திலா? இல்லை! இல்லை! காமாந்தகாரத்தில்!

வேதஒலி நிறைந்ததும், நாரதகானமும் நல்லோரின் நாதமும் கமழுவதும், ஓமப்புகை சூழ்ந்திருப்பதும், இராஜ அம்சங்கள் அழகுற உலவும்தாமரைத்தடாகங்கள் நிரம்பியதும், மந்தமாருதம் வீசும் மாண்புடையதும், வேத ஒழுக்கமுற்ற நல்லோர்சென்று அடையும்புண்யபூமியாக இருப்பதாகவும்சித்தரிக்கப்பட்டிருக்கிறது பிரம்மலோகம். இங்குகொலுவீற்றிருக்கும் சிருஷ்டிகர்த்தா, பிரம்மன்! இவருடைய லீலைகளோ, அனந்தம். சிருஷ்டிகர்த்தாவின் லீலைகளிலேமிகச்சிலாக்கியமானது, தானே சிருஷ்டித்த மங்கையைத்தானே மணம் செய்துகொண்டது. சரசுவதிக்குத், தந்தையும் பிரமனே, கணவனும் அவரே! மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம், என்ற தத்துவத்தைப்பிரமன், தனது காமத்துக்குத்துணைகொண்டார் போலும். சிருஷ்டிகர்த்தாவைப்பற்றிக் கதைகளைசிருஷ்டித்தவன், அவருக்குச் சீலத்தை, சாந்தத்தை, ஒழுக்கத்தைச் சூட்டியிருக்கக்கூடாதா! பூலோகத்தின்பிதா என்ற பட்டத்தை யாருக்குச் சூட்டினரோ, அந்தப்பிதாவின் காமப்பித்தம், பெற்ற மகளைப் பெண்டாளும் அளவுக்குச் சென்றதாகக் கதைஎழுதிப், பிறகு, அப்படிப்பட்டபிரமனைப் பூஜை செய்யவேண்டும், அந்தப்பிரமனின் கட்டளையே குலதர்மம் என்று கூறுவது எவ்வளவு போக்கிரித்தனமானபுரட்டு, அதனை நம்புவது எத்தகைய கேவலமான குருட்டுக்கொள்கை என்பதை நமது மக்கள் சிந்திக்கமறுக்கிறார்கள், மடமையை வளர்க்கிறார்கள், கொடுமைக்கு ஆளாகித் தவிக்கிறார்கள், தீயைத் தொட்டுவிட்டுத் திமி திமிஎன்று கூத்தாடுவதுபோல, மலத்தை மிதித்துவிட்டு ஐய்யய்யே! என்று அசங்கியப்படுவதுபோல், மடமை நிறைந்த கருத்துக்களை, கட்டுக்கதைகளை நம்பிக்கொண்டு, பிறகு, இழிநிலைபெற்று, இழிநிலை பெற்றதற்காகப்பிறகு மனம் வருந்துவது, சரியா? பிரம்மனின் பிரதாபத்திலே ஒன்று, பார்வதியை, அவர் பெண்டாள நினைத்தது!! ஆரியர்களின் கண்டனத்துக்கு ஆளான அரக்கர்கள் செய்ததில்லை, அப்படிப்பட்ட அக்ரமங்களை. பிரமன், மும்மூர்த்திகளில் ஒருவர். மும்மூர்த்திகளிலே முதல்வர் சிவன். இருவருக்கும்ஐந்து சிரங்களாம். அம்மை பார்வதி ஓர் தினம், நந்தவனத்திலே, சென்றார். அங்குபிரமன் உலவிக்கொண்டிருந்தார். தலை ஐந்து இருக்கவே, பார்வதி, தன்நாயகனே அது என்றுஎண்ணிக்கொண்டு, அன்னமென்று நடந்துசென்று, அவரைத்தழுவிக்கொண்டாராம்! அம்மையாருக்குத்தான் அவசரத்தால் வந்தது இந்தவிபத்து. அயனுக்குத்தெரியுமல்லவா? பார்வதியின் கரம் மேலேபட்டதும், கூவி இருக்கக்கூடாதா! "நான் பிரமன், சிவனல்ல!" என்று சொல்லியிருக்கக்கூடாதா? வலிய அணைந்த சுகானுபவத்திலே, வேதத்தின் முதல்வன், சிருஷ்டிகர்த்தா, களித்திருந்தார். அந்தநேரத்திலே வந்துசேர்ந்தார் அழகு மனைவியைத் தேடிக்கொண்டு, அரன்! கண்டார் காட்சியை! கொண்டார் கோபம்! இவனுக்கும் தலை ஐந்து இருத்தலாலன்றோ நமது இன்பவல்லிநாமென்றுஎண்ணி இவனைத்தழுவினாள் என்று வெகுண்டார். பிரமனைப் பிடித்திழுத்தார். ஒரு சிரத்தைக்கிள்ளி எறிந்தார். செய்யத்தகாத செயல் புரிந்ததற்காக எந்தப் பிரமனைச்- சிவனார் தலையைக் கொய்து தண்டித்தாரோ, அதேபிரமனை பூலோகத்தார் எப்போதும் போலவே பூஜிக்கலாயினர், நான்முகன் என்றபுதிய நாமதேயமிட்டு. பார்வதி தேவியைத் தொட்டிழுத்ததுரோகியைத், தேவனென்றும், மூவரில் ஒருவனென்றும் கூறும், மதவாதியைக் கண்டிக்க அகராதியிலே சரியான பதமும் கிடைக்குமா? காட்டுமிராண்டியும், அத்தகைய காரியம் செய்தவனைக்கண்ணால் காண மறுப்பான். இங்கு, கடவுளென்று, காமுகனை, கயவனை, சிவத்துரோகியை, கைகூப்பித் தொழுகிறார்கள். இதற்குப்பெயர் பக்தியாம்!!

என்னய்யா, பாபம்! அம்மையாரும்அவசரத்திலே ஆலிங்கனம் செய்துகொண்டார், அவரும், என்னமோ கொஞ்சம் ஆனந்தபரவசராகிவிட்டார். இதற்காக ஒரேய்டியாகக் கண்டித்துவிடுவதா?— என்று, மதவாதிகளிலே, ஒரு சாரார் கேட்பர். உண்மையிலேயே, உமையுடன் உல்லாசமாக இருந்து ஒரு சிரம் அறுபட்டதோடு, பிரமலீலை முடிவடையவில்லை. இதுபோன்ற இன்னும் பலலீலைகளை, இந்தப் பிரபஞ்சசிருஷ்டியிலே சதாசர்வகாலமும் ஈடுபட்டிருக்கும்பிரமன் செய்தவண்ணம் இருந்திருக்கிறார். நாம், அப்பறிந்துகூறினதல்ல, தோத்திரப்புத்தகங்களென்று ஆரியர் கூறிடும் புராணங்களிலே இருப்பதைத்தான், எடுத்துக்காட்டுகிறோம். பார்வதியாருக்குத் திருமணம்! அதற்குப் பிரமன் புரோகிதம்! முகமூடி அணிந்த அந்த மணப்பெண்ணின், கால் பெருவிரலைமட்டுமேதான் கண்டாராம்! அந்தத்திருவிரலின் அழகைக்கண்டதும், ஆஹா! விரலே இப்படி இருக்கும்போது, பாதம் எவ்வளவு அழகாக இருக்கும், பிற பிற............என்று யோசித்தாராம் பிரமன்! காமாந்தகாரரானார்! திருமணத்துக்காக மூட்டப்பட்ட ஓமகுண்டமே, அணைந்துவிட்டதாம், அவனுடைய கெட்ட எண்ணத்தின் விளைவின் காரணமாக! எப்படி இருக்கிறது, யோக்யதை! திருமணப்புரோகிதருக்கு எத்தகைய திருக்கலியாணகுணம்! படைப்புத்தொழிலின்தலைவர் மனதிலே, எப்படிப்பட்ட பாதக எண்ணம்? திருமணநேரத்தில்! இத்தகைய தீயநினைவு கொண்டவரைத், துதிக்கவேண்டுமாம், இதற்குப் பெயர் பக்தியாம்!! ஓய்ந்தாரா இத்துடன்? இல்லை! ஒருமுறை பிரமனே, அசுவமேதயாகம் செய்தாராம். யாககாரியத்தைத்தரிசிக்கத் தேவபத்னிகள் வந்தனர். யாககுண்டத்தருகே வீற்றிருந்த பிரமன்,

(12-ம் பக்கம் பார்க்க)

தேவ லீலைகள்!

11ம் பக்கத் தொடர்ச்சி

யாகத்தைத் தரிசிக்கவந்த தேவ பத்னிகளைத் தரிசித்தார்! அவ்வளவுதான்! ஆசை கட்டுக்கடங்க மறுத்தது. காமவெள்ளம்! இதன் பயனாகத் தோன்றினராம், ஓமகுண்டத்தருகிலேயே, பிருகு, அங்கீரசர், அத்ரி, மரீசி, புலஸ்தியர், போன்றபுண்ணியவான்கள்! ஓமகுண்டத்தருகே நேரிட்ட பிரம லீலையைக் கவனியுங்கள். இவர் சிருஷ்டிகர்த்தா! இவரைப்பூஜிக்கவேண்டும். அந்தப்பூஜைக்குப்பெயர் பக்தி! ஒப்புக்கொள்வரா ஒருசொட்டு மானரோஷமும், பகுத்தறிவும் உள்ளவர்கள்? பிரமபுராணத்திலேயே, எழுதப்பட்டிருக்கிறது மற்றோர்லீலை. கௌரி கலியாணம் நடந்ததாம், அதனைக்காணச்சென்றாராம் பிரமன். கௌரியைக் கண்டார். காமங்கொண்டாராம் தாமதம், விளைவு வீறிட்டது. உடனே தோன்றினராம், வாலகில்லிய இருடிகள்! எப்படி பிரமனின் பெருங்குணம்! பெண்களைக்கண்ட உடனே இப்பெருங் குணவானுக்குத் தோன்றும், காமம், அதன்விளைவு, ஆகியவற்றைக்கூறிவிட்டு, இப்படிப்பட்டவரை ஏத்தி ஏத்தித்தொழுவோம்யாமே என்றும் கூறுகிறார்களே புராணத்தைப்பேசி, அக்கற்பனைகளைப்பஜிக்கும் மதவாதிகள், இவர்கள், எதை மதிக்கிறவர்களாகிறார்கள்? தெய்வத்தையா? தீய செயல்புரிவோன் தெய்வமல்லவே! தீயசெயலைச் செய்ததாகக் கதையுங்கூறிவிட்டுப்பிறகு, அச்செயலினனைத் தெய்வமென்றுங்கூறினால், மதி தேய்ந்தவர்தவிறமற்றையோர் ஏற்பரோ? ஊர்வசி ஆடினாலும், திலோத்தமை பாடினாலும், பார்வதிகண்ணிலே பட்டாலும், கௌரியைக்கண்டாலும், மகளேஎதிர்ப்பட்டாலும், இந்த மகானுபாவனுக்குக் காமவெறி பிடித்துவிடுகிறது. இப்படிப்பட்ட காமவெறி பிடித்தலையும் "கடவுள்கள்" யாருக்குத்தேவை என்று கேட்கிறோம்.

———:(o):———

திராவிட நடிகர் தொண்டு

தோழர் எம். ஆர். ராதா, அவர்களின் பலிபீடம், விமலா, முதலிய சீர்திருத்த நாடகங்கள், வெற்றிகரமாக, விருதுநகரில் நடந்துவருகின்றன.

★

புதுமைக் கருத்துக்கள் நிறைந்த "போர்கோடி" எனும் சீர்திருத்த நாடகத்தைத் திருத்துறைப்பூண்டியில் நடத்தினர்.

★

சின்னசேலம் கலாமணி நாடக மண்டலத்தார் "சேரன் செங்குட்டுவன்" எனும் பண்டைத்தமிழர் வீரத்தைச் சித்தரிக்கும் நாடகத்தை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

★

காஞ்சி, திராவிட நடிகர் கழகத்தாரின் புதிய, சரிதம். தழுவிய கற்பனைச் சித்திரம், "சிவாஜிகண்ட இந்துராஜ்யம்" சென்னையில் ஏப்ரல் 29-லும், "சந்திரோதயம்" குடந்தையில் ஏப்ரல் 15 அல்லது 22-லும் நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

★

வேலூர் தோழர் C. P. சின்னராசு அவர்களை அமைப்பாளராகக் கொண்ட, திராவிட சீர்திருத்நாடகக் குழுவினரால் இராசிபுரம் (சேலம் ஜில்லா) ஓரியண்டல் தியேட்டரில் 1-4-45 ஞாயிறு முதல் போர்வாள் நாடகம் ஆரம்பமாகிறது.

பிரம்மரிஷி!

வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி என்ற பட்டம் பெறுவதற்கு விசுவாமித்திரர் மிகச் சிரமப்பட்டார் என்று புராணம் கூறும். கோவைக்குமரன் சர். ஆர். கே. சண்முகம், பாகிஸ்தானை எதிர்த்ததன் பயனாக ஆரிய வட்டாரத்திலே, ஆசியும் வாழ்த்தும், பாராட்டுதலும் பெற்றிருக்கிறாராம். இந்துபத்திரிகையிலே, ஒருவர், ஆசிரியருக்குக் கடிதம் தீட்டி, அதிலே, சர். சண்முகம், பாகிஸ்தானை எதிர்த்துப் பேசியதன் மூலம், இந்துக்களின் ரட்சகரானார், என்று பாராட்டியிருக்கிறார், பிரம்மரிஷிப்பட்டம் கிடைத்துவிட்டது. பலே!

தந்தி:—"புறமார்க்" திருச்சி.

கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயாரிக்கும்

கிளி மார்க் பட்டணம் பொடி.

தென்னிந்தியா எங்கும் புகழ்பெற்றது. காரம், மணம், நிறம், வாடை கமழும்,
எமது கிளிமார்க் பட்டணம் பொடியை உபயோகியுங்கள்!
ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீங்காது ஞாபகம்.

விலை விபரம்:— நீ-1. பவுன்கலர் வீசை 1-க்கு ரூ. 10—0—0.
நீ-1. கருப்புநிறம் வீசை 1-க்கு ரூ. 9—0—0.

ஏஜண்டு இல்லா ஊர்களில் ஏஜண்டு தேவை.

ஏ. எஸ். ராஜன்கம்பெனி,
பழையவண்ணாரப்பேட்டை சென்னை.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet Conjeeveram